# புதைந்த மர்மம்

(துப்பறியும் நாவல்)


ஆசிரியர்

ஏ. சுப்பையா



ஆனந்தா புக் சென்டர்

1/96, ராயப்பேட்டை ஹை ரோடு

மயிலாப்பூர் : : சென்னை—4.

A B C வெளியீடு : 8 முதற் பதிப்பு : மார்ச், 1957

விலை 8 அணா.

இந் நூலில் வரும் பெயர்கள், சம்பவங்கள் யாவும் கற்பனை. யாரையும் சுட்டிக் காட்டவோ, நடந்த சம்பவங்களை அம்பலப்படுத்தவோ முனைவது இந்த நாவலின் நோக்கம் அல்ல.

இந் நாவலாசிரியரின் இதர நாவல்கள் :

மோகன விலாஸ் மர்மம் விலை 8 அணா

மறைந்த நடிகை விலை 8 அணா

ஸோல் ஏஜண்ட் :

ஸ்ரீ சதர்ன் புக் டிஸ்டிரிபியூட்டர்ஸ்

13, நரசிங்கபுரம் தெரு, சென்னை - 2.

முத்தமிழ்அரசி அச்சகம், மயிலாப்பூர், சென்னை-4

# நான் சாகவேண்டும்!

ஆஸ்பத்திரிக் கட்டிலில் கிடந்த முருகேச னின் உடல் நெளிந்தது. வேதனை தாங்க முடியாமல் அவன் கத்தினான்.

அந்த 'வார்டு'க்குப் பொறுப்பான நர்ஸ், நாற்காலியிலிருந்து எழுந்து வந்தாள். முருகேசனை உற்று நோக்கினாள். தனது மெல்லிய கரங்களை அவனது நெற்றியின்மீது வைத்து அமுக்கினாள். தலையணையை மெதுவாக நகர்த்தி, அவன் வசதியாகப் படுத்துக்கொள்ளும் முறையில் சரிப்படுத்தினாள்.

முருகேசன், கண்களைத் திறந்தான். அவன் கண்களிலிருந்து நன்றி வெளிப்பட்டது; அதுவும் மரியாதைக்காகத்தான். உண்மையில் அவனது மனோநிலை மகா பயங்கரமாக இருந்தது. வெறுப்பும், குமைச்சலும் அவனைச் சித்திரவதை செய்துகொண்டிருந்தன.

இதற்குள் அவன் பிணமாகியிருக்க வேண்டியவன். இந்த வேதனைகளையெல்லாம் அவன் அனுபவித்திருக்கவேண்டிய அவசியமே இல்லை. ஆம்! ஒரு க்ஷண நேரம் தத்தளித் திருப்பான். ஆயுள் முழுவதும் அல்லற்படுவதை விட அந்த க்ஷண நேரத் துன்பம் ஒரு பொருட் டல்ல. அப்புறம் தண்ணீருக்குள்—அடியில்— புதைந்து போயிருப்பான். உலகிற்குப் பாரமாக இருந்த அவன் ஒழிந்திருப்பான்.

ஆனால்?

மனிதாபிமானம் கொண்ட சிலர் அவனைக் காப்பாற்றிவிட்டனர். ஓர் உயிரைக் காப்பாற்றி

விட்டதாக அவர்கள் சந்தோஷமடையலாம். அவன் வேதனைப்படுவதை அவர்கள் உணர்ந்தார்களா?

இப்பொழுது அவனுடைய நிலைமை என்ன? தோளில் பலமான காயம். ஆஸ்பத்திரிக் கட்டிலுக்கு அடைக்கலம். போதாக்குறைக்கு, தற்கொலை செய்துகொள்ள முயன்றதற்கு வழக்கும் தொடுத்திருக்கிறார்கள் போலீஸார்.

இதென்ன அநியாயம்! தன் உயிரைப் போக்கிக்கொள்வதற்குக்கூட ஒருவனுக்கு உரிமை கிடையாதா?

அந்த முயற்சியில் அவன் வெற்றிபெற்றிருந்தால் இதற்குள் அவன் உடலை எரித்துச் சாம்பலாக்கியிருப்பார்கள், 'பைத்தியக்காரன்' என்ற பட்டத்தைச் சூட்டி!

பைத்தியக்காரப் பட்டம்! அது சரியான பட்டம்தான். அவன் அறிவாளி என்று தன்னைக் கருதவில்லை. அவனுடைய நிலைமையில் உள்ளவர்கள் யாரானாலும் தற்கொலைதான் சிறந்ததாகக் கருதுவார்கள்.

உடைந்த உள்ளம். நலிந்த உடல். வேலை இல்லை. ஆதரிப்பவர்களும் கிடையாது. கையில் காசும் இல்லை. எல்லாவற்றையும்விட மேலாக, தாலி கட்டிய மனைவியும் ஓடிவிட்டாள். இத்தகைய சூழ்நிலையில் அவன் என்னதான் செய்யமுடியும்?

எப்படியோ அவன் எண்ணம் ஈடேறாமற் போய்விட்டது. அறிவு பூர்வமாக — தனக்குச் சொந்தம் என்று கருதிய உயிரைப் போக்கிக் கொள்ளவேண்டும் என்று அவன் நினைத்தது மகாத் தவறு என்று சட்டம் அவனைக் குற்றவாளியாகவும் ஆக்கிவைத்திருக்கிறது இப்பொழுது.

இவைகளையெல்லாம் நினைத்தபொழுது ஆத்திரம் பொங்கிற்று அவனுக்கு. உடல் நடுங்கிற்று. மீண்டும் கத்தினான்.

அவன் பக்கத்தில் நின்றிருந்த நர்ஸின் முகம் சுளித்தது. இளம் கன்னி அவள். நல்ல அழகி. அத்துடன் மிருதுவான இதையம் படைத்தவள்.

''வேதனை அதிகமாக இருக்கிறதா?'' அன்பாக வினவினாள் நர்ஸ்.

''இல்லை!'' வெறுப்புடன் பதிலிறுத்தான் முருகேசன்.

''வேதனை அதிகமாயிருந்தால் தூங்குவதற்கு மருந்து தருகிறேன்.''

''வேண்டாம்! எனக்கொன்றும் வேண்டாம்"

''பின்னே ஏன்............?''

''இந்த வேதனையை என்னால் தாங்க முடியாது என்று எண்ணிக் கொள்ளாதே! எத்தனை இரவுகள் வேண்டுமானாலும் தூங்காமல் விழித்திருக்கவும் என்னால் முடியும்!''

நர்ஸ் புன்னகை செய்தாள். ''நீ என்ன கேட்டாலும் கொடுக்கும்படி டாக்டர் சொல்லியிருக்கிறார். பசிக்கிறதா உனக்கு?''

''டாக்டர் சொல்லுவார்! அவருக்கு என்ன வந்தது?''

ஒரு தம்ளரில் அவனுக்குப் பால் கொண்டு வந்து கொடுத்தாள் நர்ஸ். அவன் குடித்தான். அவன் மனத்தில் என்ன தோன்றியதோ; ''நான் உன்னிடம் முரட்டுத்தனமாக நடந்து கொண்டதற்காக வருந்துகிறேன்'' என்றான்.

''பரவாயில்லை!'' தொனியில் சிறிதும் மாற்றமில்லாமல் கூறினாள் நர்ஸ்.

நர்ஸின் பொறுமையும், சாந்தமான பேச்சும் முருகேசனுக்கு ஆறுதலளிக்கவில்லை, ஆத்திரத்தை உண்டுபண்ணிற்று. அவளும் பெண்தானே? கொஞ்சமும் கோபம் வரவில்லையே?...ஓஹோ! அந்த மனிதாபிமானிகள் கூட்டத்தைச் சேர்ந்தவளோ?

"சண்டாளர்கள்! என்னைக் காப்பாற்றி விட்டார்களே!" பற்களை நர நரவென்று கடித்தான் முருகேசன்.

"இதோ பார்! பேசாமல் தூங்கு." நர்ஸ் மொழிந்தாள்.

"தூங்குவதா? ஏன்?"

"காலையில் உன் உடம்பு குணமாகிவிடும்."

"வேண்டாம்! குணமாக வேண்டாம். நான் சாகவேண்டும்!"

"அதுதான் முடியாமற் போய்விட்டதே? இன்னும் ஏன் அதைப்பற்றிப் பேசுகிறாய்?"

"ஏன் பேசக்கூடாது? ஆயிரந்தடவை 'நான் சாகவேண்டும்' என்று சொல்வேன். நான் சாகும்வரையில் சொல்லிக்கொண்டேயிருப்பேன். எனக்கு இந்த உலகத்தில் வாழ விருப்பம் இல்லை."

தனது அனுதாபத்தைத் தெரிவிக்கு முறையில் 'சூ, சூ' கொட்டினாள் நர்ஸ். அவனைச் சாந்தப்படுத்துவதற்காக அவன் முதுகில் தட்டிக் கொடுத்தாள்.

"நர்ஸ்!" இது முருகேசன்.

"உம்......!"

"நான் ஏன் தற்கொலை செய்யக்கூடாது?"

''அது தவறு?!''—இதைச் சொல்லிவிட்டு ஒருவித சந்தேகத்துடன் அவனை நோக்கினுள் நர்ஸ்.

''என்ன தவறு?'' முருகேசன் கிளறினுன்.

''தற்கொலை செய்வது பாவம்! முட்டாள் தனமுங்கூட. நீ விரும்பினுலும் விரும்பாது போனுலும் வாழவேண்டும்!''

''ஏன்?''

''அதுதான் முறை. உன்னைக் கவனிப் பதற்கு மற்றவர்கள் இருக்கிருர்கள்.''

''ஹீ......ஹீ......ஹீ! எனக்கு அப்படி யாரும் கிடையாது, நான் சாவதைப்பற்றிக் கவலைப்படுகிறவர்களும் இந்த உலகத்தில் ஒருவரும் இல்லை.''

''உறவினர்கள் யாரும் இல்லையா? தாய், தங்கை, அண்ணன்—தம்பி ஒருவருமே கிடை யாதா?''

''ஊ...ஹூம்! ஒரு மனைவி இருந்தாள். அவளும் என்னைவிட்டு ஓடிவிட்டாள். அதைப் பற்றி நான் வருந்தவுமில்லை. பாவம்! எவ்வளவு காலந்தான் அவள் என்னேடு சேர்ந்து கஷ்டத்தைச் சகித்துக்கொண்டிருக்கமுடியும்?''

நர்ஸின் மனம் இழகிற்று. ''நண்பர்கள் கூட இல்லையா?''

''இல்லை. என்னிடம் யாரும் நட்புக்கொள்ள மாட்டார்கள். நான்தான் ஓட்டாண்டி ஆயிற்றே? இதோ பார், நர்ஸ்! ஒரு காலத்தில் நானும் சந்தோஷமாக—ஆடம்பரமாக வாழ்ந்தவன்தான். நல்ல உத்தியோகம், அழகான மனைவியையும் பெற்றிருந்தேன். இடையில், ஒரு கார் விபத்து நடந்துவிட்டது. அந்தக் காரை ஓட்டியவர் என்

முதலாளி. நான் காரில் உட்கார்ந்திருந்தேன். அறுபது மைல் வேகத்தில் கார் சென்றதால் விபத்து நேர்ந்தது. ஆனால் போலீஸ் விசாரணையின்போது இருபது மைல் வேகத்தில் அவர் ஓட்டியதாக நான் சாட்சி சொல்லவேண்டும் என்றார். விபத்தில் யாருக்கும் சாவோ, காயமோ ஏற்படவில்லை. ஆனால் காரின் சில பாகங்கள் மாத்திரம் கெட்டுப்போய்விட்டன. அதற்கு இன்சூரன்ஸ் கம்பெனியிலிருந்து பணம் வாங்க வேண்டும் என்ற நோக்கத்தில்தான் என்னை வற்புறுத்தினார் அவர். என்னால் பொய் சொல்ல முடியவில்லை. பொய் சொல்லிப் பழக்கம் இல்லை......''

''அது நல்லது தானே?''

''ஆம்! நல்லதுதான்! அந்த 'நல்லது' என் வேலையைத் தொலைத்துவிட்டது. அதுமாத்திரமல்ல, என் முதலாளிக்கு என்மீது ஆத்திரத்தையும் உண்டுபண்ணிவிட்டது. எங்குமே எனக்கு வேலையும் கிடைக்காமல் செய்துவிட்டார் அவர். வேலை இல்லாமல் எத்தனை நாள் வாழமுடியும்? பசியும், பட்டினியும் சூழ்ந்துகொண்டன. என் மனைவியினால் தாக்குப்பிடிக்க முடியவில்லை. என்னுடைய நண்பனே அவளைக் கூட்டிச் சென்றுவிட்டான். அவ்வளவுதான், என் புத்தி மாறிப் போய்விட்டது. பைத்தியம் பிடித்தவன் போல் ஆனேன். நாளாக, நாளாக என் உடலும் தேய்ந்தது. ஓர் ஆஸ்பத்திரிக்குச் சென்றேன். இனிமேல் என் உடலில் பலம் ஏற்படாது என்று டாக்டர் சொல்லிவிட்டார். அப்புறம் நான் உயிர் வாழ்வதில் என்ன அர்த்தம் இருக்கிறது? தற்கொலைதான் சிறந்த வழி என்று முடிவு செய்துவிட்டேன். என் உயிரால் எனக்கும்

டிருந்தது. ஆம்! அந்த உருவம் காகிதத்தில் எழுதியதால் ஏற்பட்ட சத்தம் அது.

உருவம் எழுதியதைப் பார்க்கக்கூடியவர் [illegible]ள் யாரும் அங்கே இல்லை. இருந்திருந்தால் அவர்கள் தங்கள் கண்களையே நம்பியிருக்க [illegible]மாட்டார்கள். ஏனென்றால், அந்தக் காகிதத்தில் “[illegible]தியது கதையல்ல, கடிதமும் அல்ல; ஒரு ஜனலைத் திட்டம்!

[illegible] — உருப்புக்களை மனம்தான் ஆட்டி [illegible]யும் என்ற[illegible]தைச் சில சமயங்களில்தான் “அந்த ஒரு [illegible]யம். அதாவது, உடல்— இந்தத் தடவை நான் வெள[illegible]க் கட்டுப்பட்டு, என் முயற்சியில் வெற்றி பெற்[illegible] என்று அறி

“முடியாது!” உறுதியாகச் [illegible] நடப் நர்ஸ்.

“ஏன் முடியாது?”

“உன் போன்றவர்களால் தற்கொலை செய்துகொள்ள முடியாது!”

முருகேசன் அவளை முறைத்துப் பார்த்தான். ‘உன் போன்றவர்கள்’ என்ற வார்த்தை அவனை எங்கேயோ இழுத்துச் சென்றது. ‘என்னால் முடியும்’ என்று சொல்வதற்கு வாயைத் திறந்தான்; ஆனால் சொல்ல முடியவில்லை. தன்னால் திரும்பவும் தற்கொலை செய்துகொள்ள முடியுமா என்பது அவனுக்கே சந்தேகமாக இருந்தது.

உண்மையில், மீண்டும் தற்கொலை செய்துகொள்ள வேண்டும் என்று அவன் விரும்பவில்லை. காரணம், அவனுக்கே விளங்கவில்லை. ஒருவேளை, ஒருதடவை தற்கொலை செய்ய முயன்று தோற்றவர்கள் மீண்டும் முயற்சி

கண்கள்
ஆக்க முடியுமோ
பாம். நீ உயிருடன்
என்பது ஆண்டவனின்

...தைகளுக்குப் பாடம் போதிப்பது போன்று பேசிய நர்ஸின் வார்த்தைகள் முருகேசனுக்கு ஆச்சரியத்தை உண்டு பண்ணின. தன்னை அறியாமலே சிரித்தான் அவன்.

நர்ஸ் கூறினாள்: ''இதோபார்! நீயே ஒரு காலத்தில் எல்லோராலும் மதிக்கப்படும் மனிதனாகவும் ஆகிவிடலாம். நாம் நினைக்கிறபடி எதுவும் நடைபெறுவதில்லை. சிந்தனை செய்து பார்!''

## கொலைத் திட்டம்

ஓர் அறை. தனியாக ஓர் உருவம் நாற்காலியில் அமர்ந்திருந்தது. சுடுகாட்டின் அமைதி அங்கு நிலவியிருந்தது. 'சர், சர்' என்று ஏதோ ஒரு மெல்லிய சத்தம் மாத்திரம் கேட்டுக்கொண்

டிருந்தது. ஆம்! அந்த உருவம் காகிதத்தில் எழுதியதால் ஏற்பட்ட சத்தம் அது.

உருவம் எழுதியதைப் பார்க்கக்கூடியவர்கள் யாரும் அங்கே இல்லை. இருந்திருந்தால் அவர்கள் தங்கள் கண்களையே நம்பியிருக்க மாட்டார்கள். ஏனென்றால், அந்தக் காகிதத்தில் எழுதியது கதையல்ல, கடிதமும் அல்ல; ஒரு கொலைத் திட்டம்!

உடல்—உருப்புக்களை மனம்தான் ஆட்டி வைக்கிறது என்பதைச் சில சமயங்களில்தான் ஒருவன் உணர முடியும். அதாவது, உடல்—உருப்புக்கள் ஏதோ ஒன்றுக்குக் கட்டுப்பட்டு, அதன் ஆணைப்படி நடக்கிறது என்று அறிகிறான். அதேபோல, தன் கட்டளைப்படி நடப்பதற்கு உடல்—உருப்புக்கள் இருக்கின்றன என்று சில சமயங்களில் மனம் அகங்காரம் கொள்வது உண்டு. அந்த நேரத்தில் உடல்—உருப்புக்களின் மூலம் தன் இச்சையை நிறைவேற்றிக்கொள்கிறது மனம்.

அறையில் உட்கார்ந்து எழுதிக்கொண்டிருந்த உருவம், மேற்சொன்னவைகளில் இரண்டாவது பிரிவைச் சேர்ந்திருந்தது. அதனுடைய மனத்தை ஒரேயொரு எண்ணந்தான் அந்த நேரத்தில் ஆக்கிரமித்திருந்தது. அதென்ன? மற்றொரு நபரைக் கொலை செய்வது! சிந்தித்தால் திட்டத்தில் ஓட்டை விழுந்து விடக்கூடும் என்று கருதி, சிந்தித்துத் தர்க்கித்து முடிவைக் காகிதத்தில் எழுதிக் கொண்டிருந்தது. சாத்திய-அசாத்தியங்களையெல்லாம் கணக்கிட்டுப் பார்த்தது. கொலையும் செய்துவிடவேண்டும், குற்றம் தன் மீது சாரக்கூடாது! தன் அறிவுக்கு எட்டிய அளவு திறமையாகத்தான் அந்தத் திட்டத்தை

உருவாக்கிற்று. எதிர்பாராத சம்பவங்கள் குறுக்கிடலாம் என்பதையும் ஆலோசனை செய்து அவைகளுக்குப் பரிகாரமும், மாற்று நடவடிக்கைகளும் திட்டத்தில் குறிப்பிட்டது. காலம், இடம், முறை, கொலை செய்யப்படவேண்டிய நபர் ஆகிய எல்லா அம்சங்களையும் 'பக்கா'வாக நிர்ணயித்துவிட்டது.

உருவத்தின் தலை நிமிர்ந்தது. கையால் அந்தக் காகிதத்தை எடுத்து நிதானமாக, நிறுத்தி, கவனமாகப் படித்துப் பார்த்தது. சபாஷ்! விஷயம் மகாத் தெளிவு!

அனல் பறக்கும் அதன் முகத்தில் சிறு புன்னகை தவழ்ந்தது. மகிழ்ச்சியினால் ஏற்பட்ட புன்னகையல்ல, அகங்காரத் திமிறினால் முளைத்தெழுந்த சிரிப்புச் சாயல்! நீண்ட பெருமூச்சும் விடுத்தது அந்த உருவம்.

மனிதன், கடவுளின் பிரதிபிம்பம் தானே? தன்னைப் போலத்தானே மனிதனைச் சிருஷ்டித்தான் அவன்? ஆகவே, சிருஷ்டிகர்த்தாவின் சிங்காரமயமான பயங்கரச் சிரிப்பு அந்த உருவத்தின் உள்ளத்தில் எதிரொலி கிளப்பிற்று.

திட்டம் உருவகமடைந்துவிட்டது! நன்மை-தீமைகள், லாப-நிஷ்டங்கள், எல்லாம் அலசி-ஆராய்ந்த நாசகாரத் திட்டம் உருவாகிவிட்டது!

ஒரேயொரு இடத்தை மாத்திரம் பூர்த்தி செய்ய வேண்டும். அந்த இடத்திலும், புன்முறுவலுடன் ஒரு தேதியை எழுதிப் பூர்த்தி செய்துவிட்டது அந்த உருவம்.

அப்பால் ஒரு கலகலப்பான சிரிப்பு. அந்தக் காகிதம் துண்டு துண்டாகக் கிழிக்கப்பட்டது. ஒரு துண்டுகூடக் கீழே விழாமல் தீக்கு இரை

யாகிவிட்டது. ஆனால் திட்டம் எரியவில்லை; அதன் சிருஷ்டிகர்த்தாவின் மூளையில் நன்கு பதிவாகிவிட்டது.

# கோட்டைக்குள் திருடன்!

போலிஸ் இன்ஸ்பெக்டர் பாண்டியன், சாப்பிடுவதற்காக அப்பொழுதுதான் வீட்டிற்கு வந்தார். அவருடைய மனைவி சாதம் படைக்கவில்லை; கண்ணீர் மல்க ஒரு கடிதத்தை அவரிடம் கொடுத்தாள். கடிதத்தைப் படித்த பாண்டியனின் கண்களிலிருந்து ரத்தம் கொப்பளித்தது. அவர் உதடுகள் துடித்தன.

"இதை என்னால் நம்பமுடியாது! நம் சரோஜாவா அப்படிச் செய்வாள்?" படபடத்தார் பாண்டியன்.

சரோஜா, பாண்டியனின் செல்வப்புதல்வி. வயது பதினைந்து. உயர்நிலைப்பள்ளியில் 10-வது வகுப்பு படித்துக் கொண்டிருந்தாள்.

கடிதம், உயர்நிலைப் பள்ளியின் தலைமை உபாத்தியாயினி திருமதி அருணாதேவியிடமிருந்து வந்திருந்தது. கடிதத்தில் எழுதப்பட்டிருநத விஷயம் இதுதான்:

கடந்த சில தினங்களாக பள்ளிக்கூட மாணவிகளின் சில சாமான்கள் காணமற்போய்க் கொண்டிருந்தன. அவைகளைக் கண்டுபிடிப்பதற்குச் செய்த முயற்சியில் சரோஜா மாட்டிக் கொண்டாள். சாமான்களைத் திருடியவள் சரோஜாதான் என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. அவளும் குற்றத்தை ஒப்புக் கொண்டு

விட்டாள். அது சம்பந்தமாக இன்ஸ்பெக்டர் பாண்டியனைச் சந்தித்துப் பேச விரும்புகிருள் அருணுதேவி.

கடிதத்தை மடித்து ஜேபியில் வைத்துக் கொண்டார் பாண்டியன். "கமலா! இதைப்பற்றி நீ கவலைப்பட வேண்டாம். நான் கவனித்துக் கொள்கிறேன்" என்று தன் மனைவிக்கு ஆறுதல் கூறினர்.

ஒரு தினுசாகச் சாப்பாடு முடிந்தது. நேரே தனது காரில் பள்ளிக்கூடத்திற்குத் தான் சென்ருர் பாண்டியன். 'தலைமை உபாத்தியாயினி' என்று போர்டு மாட்டப் பட்டிருந்த ஓர் அறைக்குள் நுழைந்தார்.

விசாலமான அறை. சுவர்களில் தேசத் தலைவர்களின் உருவப்படங்கள் தொங்கிக் கொண்டிருந்தன. மத்தியில் ஒரு நீள அகலமான மேஜை. வெல்வெட்டுணி-தையல்வேலைப்பாடு கள் நிறைந்தது-மேஜையின்மீது விரிக்கப்பட்டு இருந்தது. அதன் பின்னுல் ஒரு சுழல்-நாற்காலியில் கம்பீரமாக உட்கார்ந்திருந்தாள் அருணுதேவி. மின்சார விசிறி காற்றை அள்ளி வீசிக்கொண்டிருந்தது.

பாண்டியன், சரோஜாவின் தந்தையாக அங்கு செல்லவில்லை. சாக்ஷாத் போலீஸ் அதிகாரியாகவே சென்ருர். தலைமை உபாத்தி-யாயினிக்கு, மரியாதைக்காகவேனும் வணக்கம் தெரிவிக்கவில்லை. அறைக்குள் 'டிப்டாப்'பாக நுழைந்தார். அருணுதேவியின் எதிரில் கிடந்த ஒரு நாற்காலியில் அமர்ந்தார். மீசையைத் தடவிவிட்டுக்கொண்டே அருணுதேவியை ஏறிட்டு நோக்கினர்.

அவள், பாண்டியனின் மனே நிலையைப் புரிந்துகொண்டாள். "எனது கடிதம் கிடைத்து

இருக்கும் என்று நினைக்கிறேன்'' என்று குறுநகையுடன் நளினமாக விஷயத்தை ஆரம்பித்தாள்.

''ஆம்! கிடைத்தது!'' மிடுக்காகப் பதில் அளித்தார் இன்ஸ்பெக்டர்.

அதைப்பற்றிச் சிறிதும் பொருட் படுத்த வில்லை பள்ளித்தலைவி. ''மிஸ்டர் பாண்டியன்! திருட்டை சரோஜாவே ஒப்புக்கொண்டு விட்டாள். நான் உங்களிடம் பேசவிரும்புவதும், உங்களை இங்கு வரவழைத்ததும் அதைச் சொல்வதற்காக அல்ல. அந்த விஷயத்தைக் கடிதத்தின் மூலம்தான் தெரிந்திருப்பீர்களே? ஆனால், இத்தகைய எண்ணம் சரோஜாவுக்கு ஏன் ஏற்பட்டது என்பதை நீங்களும் அறிய வேண்டும் என்ற நோக்கத்தில்தான் உங்களிடம் நேரில் பேச விரும்பினேன்........''

''ஏன் ஏற்பட்டது?''

''காணாமற்போன பொருள்கள் மிகவும் சாதாரணமான ரப்பர், பென்சில், பேனா போன்றவைகள்தாம். அவைகளை அவள் திருடக் காரணம் என்ன?......''

பாண்டியன் குறுக்கிட்டார். ''சரோஜா திருடினாள் என்று சொல்ல வேண்டாம்! குற்றம் நிரூபிக்கப்படும் வரையில் சரோஜா திருடி அல்ல?''

''அவளே ஒப்புக்கொண்டு விட்டாளே?''

''உங்களிடம் அவ்வாறு ஒப்புக்கொண்டு இருக்கலாம்; திருடாதவன் அடிக்குப் பயந்து திருடியதாக எங்களிடம் ஒப்புக்கொள்வதைப் போல. என் மகளின் குணம் எனக்கு நன்றாகத் தெரியும்.''

"சரி, உங்கள் இஷ்டம்போல எப்படி வேண்டுமானாலும் வைத்துக்கொள்ளுங்கள். நான் சொல்லவேண்டியதைச் சொல்லிமுடித்து விடுகிறேன். இதுவரையில், 'நீதான் திருடினாய்' என்று சரோஜாவிடம் ஒருவார்த்தைகூட நான் சொல்லியதில்லை. ஏனென்றால் அவள் வயது வந்தபெண். மேலும் உங்களுடைய மகள். நான் அவ்வாறு சொன்னால் அவள் மனம் மிகவும் வேதனை அடையும்; மனம் மாறுபட்டு விடவும் கூடும் என்று நான் பயந்தேன். அதனால் மற்ற மாணவிகளுக்குக்கூடத் தெரியாமல் செய்து விட்டேன். ஆனால், சரோஜாவின் வாயிலிருந்தே உண்மை வெளிவரும்படியாகத் தந்திரமாகச் செய்தேன். நான் ஏற்கனவே கூறியதுபோல மிகவும் அற்பமான பொருள்கள்தான் காணமற் போயின. யாருக்கும் கிடைக்காத வஸ்துக்கள் அல்ல அவைகள். அப்படியானால் அந்தப் பொருள்களின்மீது ஆசை ஏற்படுவானேன்? மனோ நிலையில் ஏதாவது அடிப்படைக்கோளாறு இருக்கவேண்டும் என்று எனக்குத் தோன்று கிறது. எனவே, நீங்களும் சரோஜாவைக் 'கன்னா பின்னா' என்று திட்டாமல், மிகவும் ஜாக்கிரதையாக அவளிடம் நடந்துகொள்ள வேண்டும் என்பதுதான் எனது வேண்டு கோள்."

"சரோஜா எங்கே?"

"வகுப்பில் இருக்கிறாள். இருங்கள், கூட்டி வரச் சொல்கிறேன்."

சேவகனை அனுப்பினாள் அருணாதேவி.

சிறிது நேரத்தில் சரோஜா வந்தாள். பாண்டியன் திரும்பிப்பார்த்தார் மகளை. அவள் முகம் களையிழந்து காணப்பட்டது. அழுததினால்

கன்னம் வீங்கிப்போயிருந்தது. தந்தையின் உள்ளத்தில் துக்கம் பொங்கியெழுந்தது. ஆத்திரத்தைப் பெருமூச்சாக மாற்றினர் அவர்.

"சரோஜா! இங்கேவா!" அன்பாக அழைத்தார் பாண்டியன்.

சரோஜா, தந்தையின் அருகில் நெருங்கினள். அருணுதேவி மெதுவாக நழுவினள்.

"உன்னை இந்தப் பள்ளிக்கூடத்தில் நான் சேர்த்ததே தவறு. சரோஜா! மரியாதை தெரியாதவள் தலைமை உபாத்தியாயினியாக இருக்கும் இடத்தில் கண்ணியமான உன்போன்ற குழந்தைகள் எப்படி நேர்மையாக இருக்க முடியும்?" இது பாண்டியன்.

"அப்பா! தவறு என்மீதுதான். தலைமை உபாத்தியாயினி ரொம்ப நல்லவள்."

"இதோபார்! உன்னைப்பற்றி எனக்குத் தெரியாதா? இந்த வயதிற்குள் எத்தனை திருடர்களை நான் பிடித்திருக்கிறேன். முகக் குறிப்பிலிருந்தே நான் திருடனைக் கண்டுபிடித்து விடுவேனே? நீ எதையும் திருடவில்லை என்று எனக்குத் தெரியும். திருட்டில் இரண்டு வகை உண்டு. ஒன்று, திடீரென்று ஒரு பொருளைப் பார்த்தமாத்திரத்தில் அதன்மீது ஆசைகொண்டு திருடுவது; மற்றொன்று, அடுத்தவர்களின் பொருள்களை அபகரிப்பதில் ஆனந்தம் அடைவது. இந்த இரண்டு வகைகளிலும் சேர்ந்தவள் அல்ல நீ. ஆனல் அர்த்தமில்லாமல் பொய் சொல்வாய்!"

"ஆனல் நான்......"

"திருடியதாக ஒப்புக்கொண்டாய், இல்லையா?"

“ஆம்!”

“அது பொய்தானே?”

சரோஜா தலை குனிந்தாள்.

“பயப்படாதே சரோஜா! உண்மையில் என்ன நடந்தது, சொல்!”

“எங்கள் வகுப்பில் உள்ள சிலரைமாத்திரம் தனியாக ஓரிடத்தில் கூட்டினுள் தலைமை உபாத்தியாயினி. களவினுல் ஏற்படும் தீமைகளைப்பற்றி ஒரு குட்டிப் பிரசங்கம் நிகழ்த்தினுள். அடிக்கடி என்னை முறைத்துப் பார்த்தாள். மற்றப் பெண்களும் என்னை நோக்கினர். என்னுல் நிமிர்ந்து பார்க்கமுடியவில்லை, குனிந்து கொண்டேன். எல்லோரும் என்னைச் சந்தேகிக்கிருர்கள் என்று எனக்குத் தோன்றிற்று. மீட்டிங் முடிந்ததும் தலைமை உபாத்தியாயினி என்னைத் தனிமையாக அழைத்துச் சென்ருள். ‘உண்மையைச் சொல்லிவிடு, நீதானே திருடினுய்?’ என்று அன்பாகக் கேட்டாள். நான் ஒப்புக்கொண்டால் மன்னித்துவிடுவதாகவும் கூறினுள். யோசனை செய்து பார்த்தேன் நான். நான் திருடவில்லை என்று மறுத்தாலும் தலைமை உபாத்தியாயினி நம்பமாட்டாள், விஷயமும் விபரீதமாகிவிடும் என்று நான் பயந்தேன். அதனுல் நானே திருடியதாக ஒப்புக்கொண்டுவிட்டேன்.”

“பார்த்தாயா! அது எவ்வளவு பெரிய முட்டாள் தனம்? எனக்கு மகளாக நீ பிறந்திருந்தும் இப்படிச் செய்யலாமா? உம்......! சரி, உன் தலைமை உபாத்தியாயினி எங்கே?”

“வகுப்பிற்குப் போயிருப்பாள்.”

“சரி, என்னேடு வா!”

பாண்டியன் எழுந்தார். சரோஜாவுடன் வெளியேறினர். எதிரில் அருணாதேவி வந்தாள்.

பாண்டியன் கூறினர்: "சரோஜாவை நான் அழைத்துச் செல்கிறேன். உங்கள் பள்ளிக் கூடத்தில் நடந்த களவைக் கண்டுபிடிப்பதற்கு நீங்கள் ஸ்தல போலீஸ் அதிகாரிகளை வர வழையுங்கள். உண்மையில் என் மகள் திருட வில்லை. அவள்தான் திருடினாள் என்று நிரூபிக்கப்பட்டால் சட்டப்படி அவள்மீது நீங்கள் வழக்குத் தொடரலாம். அதற்குரிய தண்டனையை அவள் அனுபவிக்கட்டும். நாங்கள் வருகிறோம்."

அருணாதேவி வியப்படைந்தாள். அவள் ஏதோ சொல்வதற்கு முயன்றாள். அதற்குள் பாண்டியன், சரோஜாவின் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு போய்விட்டார்.

வெளியே வந்ததும் காரில் அமர்ந்த பாண்டியன், தன் மகளின் பக்கம் திரும்பினர். "சரோ! நம் எதிரில் வந்தாளே ஒரு பெண்—நல்ல சிகப்பாக, சுருண்ட முடியுடன், கூரிய கருவிழிகளோடு—அவள் யார்?"

"பத்மா, அவளுடைய பெயர். என் வகுப்பில்தான் அவளும் படிக்கிறாள்."

"உம்......!"

"ஏன், எதற்காக பத்மாவைப்பற்றிக் கேட்கிறீர்கள்?"

"அனேகமாக அந்தப் பெண்தான் திருடியிருக்கவேண்டும் என்று நினைக்கிறேன்."

"காரணம்? உங்களைப் பார்த்ததும் அவள் பயந்தாளா?"

"இல்லை! அவள் முகத்தில் அசடு வழிந்தது. குற்றம் செய்தவர்களின் முகம், போலீஸ்

க்காரர்களைக் கண்டதும் அப்படித்தான் இருக்கும்! ஆனால் அவள், உன்னைப்போல அவ்வளவு சுலபமாக ஒப்புக்கொண்டுவிடமாட்டாள். மகா அழுத்தக்காரி போலத் தோன்றுகிறது."

சரோஜா பெருமூச்சு விட்டாள். "என்ன காரணமோ, அந்த நேரத்தில் என் புத்தி அப்படி மாறிப்போய்விட்டது. இல்லாது போனால் நான் செய்யாத ஒரு குற்றத்தைச் செய்ததாக ஒப்புக் கொண்டிருப்பேனா?"

பாண்டியன், சரோஜாவின் முதுகில் தட்டிக் கொடுத்தார். "பரவாயில்லை, சரோஜா! உன் அம்மாவைப்போல நீ. அவளும் இப்படித்தான், மிரட்டினால் பயந்துவிடுவாள்...அதுபோகட்டும்; இதெல்லாம் நமக்கு எதிர்காலத்திற்கு ஒரு படிப்பினை. அவ்வளவுதான்!"

கார் வேகமாகச் சென்றது.

## சதியா - சாகஸமா?

உயரமான ஒருவீடு. காலைச் சூரியனின் கிரணங்கள் அந்த வீட்டு மாடிக்குள் புகுந்து விளையாடின. விளையாட்டு வீரனைப்போல அழகாக பனியனும், அரைக்கால் நிஜாரும் அணிந்த ஒருவன் மாடியிலிருந்து 'தட, தட' வென்று கீழே இறங்கினான். அவன் பெயர் நம்பிராஜ். கையில் ஒரு டென்னிஸ் மட்டையும் வைத்திருந்தான் அவன்.

நம்பிராஜனுக்கு முப்பதுவயது இருக்கும். பயில்வான்போன்ற உடற்கட்டு. எல்லா விளையாட்டுகளிலும் சிறந்தவன். டென்னிஸ்

ஆட்டத்தில் 'சாம்பியன்' என்று பெயர் பெற்றவன். பணத்திற்குப் பஞ்சமேயில்லை. எனவே உல்லாச புருஷனாக வாழ்ந்தான். ஊர்வசியோ என நினைக்கும்படி அதிரூபவதியான மனைவியும் இருந்தாள் அவனுக்கு. மனிதனுக்கு வேறென்ன வேண்டும்?

அவ்வளவு வசதிகள் படைத்திருந்தும் நம்பிராஜன், மாடியிலிருந்து கீழே இறங்கிய பொழுது ஒரு நிழலும் அவனைப் பின் தொடர்ந்தது. அந்த நிழல் யாருடைய கண்ணிற்கும் தெரியாது. ஆனால் அவன் அதை உணர்ந்தான். அதனால் அவன் முகம் லேசாகச் சுளித்தது; புருவங்கள் மேலேறின.

கீழே, ஹாலுக்கு வந்தான் நம்பிராஜன். கைகளை உதறி, தலையைச் சொடுக்கிக்கொண்டான், தலையிலிருந்த பெரும் பாரத்தை இறக்கி விட்டவன்போல. ஹாலைக்கடந்து தனது மனைவியின் அறைக்குள் நுழைந்தான்.

விமலா — நம்பிராஜனின் மனைவி-க்கு இருபத்திரண்டு வயது. எங்கும் சுலபத்தில் பார்க்கமுடியாத பேரழகி. திடீரென்று அவளைக் காண்பவர்கள், புடவையணிந்த- உயிர் பெற்ற தங்கச்சிலையோ என்றுதான் எண்ணுவார்கள். மெத்தை தைத்த சோபாவில் ஆனந்தமாக அமர்ந்து ஏதோ ஒரு பத்திரிகையைப் படித்துக் கொண்டிருந்தாள்.

நம்பிராஜன், சிறிதுநேரம் விலகியே நின்று அவள் முகத்தைக் கூர்ந்து பார்த்தான். ''விமலா!'' என்று அழைத்துக்கொண்டே அவள் பக்கத்தில் நெருங்கினான். அவள் ஏறிட்டுப் பார்த்தாள்.

"இன்று காலை 'டிபன்' என்ன?" நம்பிராஜன் கேட்டான்.

"உங்களுக்குப் பிடித்தமானதுதான், பூரி-உருளைக்கிழங்கு!"

சிற்றுண்டியையும் அருந்தி, அதற்குமேல் சூடாக ஒரு காப்பியையும் தள்ளினான் நம்பிராஜன். பத்திரிகையை விரித்து 'விளையாட்டுப் பகுதி'யை மாத்திரம் பார்த்தான். அவனது உதடுகள் பிதுங்கின. பத்திரிகையை வீசிவிட்டு அன்றையத் தபால்களை ஒவ்வொன்றாகப் படிக்க ஆரம்பித்தான். பல கடிதங்களைக் கிழித்தான்; இன்னும் சிலவற்றை அப்படியே குப்பைக் கூடையில் வீசினான். மற்றொரு கடிதத்தைப் படித்ததும் அவன் முகம் பிரகாசித்தது.

"விமலா! எனது பெரியம்மாளிடமிருந்து ஒரு கடிதம் வந்திருக்கிறது."

"என்னவாம்?"

"கோடைகால விடுமுறையின்போது பட்டணத்திற்கு வரும்படி எழுதியிருக்கிறாள். போவோமா?" ஆர்வத்தோடு கேட்டான் நம்பிராஜன்.

"உம்—! இன்றைக்கே புறப்பட்டு விடலாமா? கோடை விடுமுறை வரையில் ஏன் காத்திருக்கவேண்டும்? வெறும் பெரியம்மாளாக யிருந்தால் போகாமல் இருந்துவிடலாம். அவளுடைய சொத்துக்கு நீங்கள்தானே வாரிசு?"

நம்பிராஜன் சிரித்தான். "அது வாஸ்தவம்! ஆனால் சொத்து, பெரியம்மாளின் விருப்பத்தின் படி எனக்கு வரவில்லை. எனது பெரியப்பாவே சாகும்பொழுது, தனது மனைவியின் ஆயுளுக்குப்

பின்னர் சகல சொத்துக்களும் எனக்குச் சேர வேண்டும் என்று உயில் எழுதி வைத்திருக்கிறார். என்னை வளர்த்தவர்களே அவர்கள் தானே?''

''எனக்குத் தெரியாதா என்ன? இருந்தாலும் அங்கே போவதற்கு எனக்கு இஷ்டமில்லை. உங்கள் முதல் மனைவியும் அங்கு வருவாள் இல்லையா?''

''ஆமாம். அதனால் என்ன?''

''நான் உங்களோடு இருப்பதைப் பார்த்தால் அவள் மனம் வேதனைப்படும்.''

''படட்டுமே, நமக்கென்ன? அவள்தான் தனது தந்தையுடன் சந்தோஷமாக இருக்கிறாளே?''

''இருந்தாலும்? அவள் அனுபவிக்க வேண்டிய இன்பத்தை நான் கெடுத்துவிட்டேன் என்ற ஆத்திரம் என்மீது இருக்காதா?''

''ஒரு நாளும் இருக்காது. கல்யாணியை நீ இன்னும் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை; அதனால் அப்படிச் சொல்கிறாய்!''

''உம்......?''

''சந்தேகமில்லாமல்! ஒரு மாதத்திற்கு முன்புகூட ஒரு 'டோர்னமெண்ட்'டிற்காக நான் மதுரைக்குப் போயிருந்தபொழுது தற்செயலாக கல்யாணியைச் சந்தித்தேன். சிறிதும் வித்தியாசம் இல்லாமல்தான் அவள் என்னிடம் பேசினாள், பழகினாள். நான் சந்தோஷமாக இருக்கவேண்டும் என்பதுதான் அவளுடைய ஆசையாம். 'வீட்டிற்கு வாருங்கள்' என்றுகூட என்னைக் கூப்பிட்டாள்; நான்தான் போகவில்லை.''

''அந்த விஷயத்தை என்னிடம் சொல்லவில்லையே, ஏன்?''

"இதென்ன ஒரு பெரிய விஷயமா என்று சொல்லவில்லை, அவ்வளவுதான்!"

"ஓஹோ! உம்......!" உறுமினாள் விமலா.

"என்ன, கோபமா?" நம்பிராஜன் நயந்தான்.

"இப்பொழுதுதான் எனக்குப் புரிகிறது."

"என்ன?"

"கல்யாணி உங்களை மயக்கிவிட்டாள். அதனால்தான் கடந்த ஒரு மாதமாகவே நீங்கள் ஒரு மாதிரியாக இருக்கிறீர்கள். உம்......! என்ன இருந்தாலும் அவள் முதல் மனைவி அல்லவா? அந்தப் பாசம் உங்களைப் பிடித்து இன்னும் ஆட்டிக்கொண்டிருக்கிறது!"

"விமலா!" ஆத்திரத்துடன் கத்தினான் நம்பிராஜன்.

"இந்த மிரட்டலுக்கெல்லாம் நான் பயப்பட மாட்டேன்." படக்கென்று எழுந்து ஹாலுக்கு வந்துவிட்டாள் விமலா.

நம்பிராஜன் சிறிது நேரம் யோசனை செய்தான். பின்பு மெதுவாக எழுந்து அவனும் ஹாலுக்குச் சென்றான். ஒரு நாற்காலியில் அமர்ந்து, சுவரில் மாட்டப்பட்டிருந்த 'விஸ்வாமித்ரா—மேனகா' படத்தைக் கூர்ந்து கவனித்துக்கொண்டிருந்தாள் விமலா. அவள் பக்கத்தில் நெருங்கினான் அவன். அவள் தலையைக் கோதினான். லேசாகக் கிளுகிளுத்தான்.

"பைத்தியம்! அர்த்தமில்லாமல் கோபப்படுகிறாயே? எட்டு வருஷகாலம் கல்யாணியுடன் வாழ்ந்த நான், அவளைப் பிரிந்து உன்னுடன் வாழ்வதிலிருந்தே என் குணத்தை நீ அறிந்திருக்கவேண்டும். அவள்மீது எனக்குப் பிரியம்

இருந்தால் உன்னை நான் நேசித்திருக்க முடியுமா? நீயே சொல்!'' நளினமாகப் பேசி, நாடியில் கையைக் கொடுத்து அவள் முகத்தை உயர்த்தினான் நம்பிராஜன்.

விமலாவின் வதனத்தில் புன்னகை நெளிந்தது. ''என்ன காரணமோ, கல்யாணியை நினைக்கும்பொழுது எனக்குப் பயமாகவே இருக்கிறது. அவள் மனத்தில் இருப்பதை யாரும் புரிந்துகொள்ள முடியாது. நம்மைப் பிரிப்பதற்கு அவள் சந்தர்ப்பத்தைத்தான் எதிர் பார்த்துக்கொண்டிருக்கிறாள் என்று நினைக் கிறேன்.''

சிந்தித்தான் நம்பிராஜன். ''நாம் என்ன முட்டாள்களா? அவள் அல்ல, அவளைப் படைத்த பிரம்மாவே வந்தாலும் நம்மைப் பிரிக்க முடியாது. அவள் நம்மைப் பிரிக்க முயன்றால் அவளையும் நம்முடன் சேர்த்துக்கொள்வோம்!''

''அடடே! ரொம்ப சாமர்த்தியமாகப் பேசு கிறீர்களே? அந்த ஆசைகூட இருக்கிறதா உங்களுக்கு?......உம்......? அப்புறம்?''

''இதோ பார், விமலா! எந்த விஷயத்தை யும் சந்தேகக் கண் கொண்டு பார்க்கக் கூடாது......''

''சரி! நல்ல கண்களோடு பார்க்கிறேன். இப்பொழுது என்ன செய்யவேண்டும் என் கிறீர்கள்?''

''என்னோடு வா, சொல்கிறேன்!''

விமலாவின் கையைப் பிடித்துத் தூக்கி, கட்டி அணைத்துக்கொண்டு அவளுடைய அறைக்கு அழைத்துச் சென்றான் நம்பிராஜன்.

# படையெடுப்பு

மாஜிஸ்டிரேட் மகாதேவன், சாய்வு நாற்காலியில் ஆனந்தமாகச் சாய்ந்துகொண்டிருந்தார் தனது தனி அறையில். சேவகன், ஒரு சீட்டைக் கொண்டுவந்து அவரிடம் கொடுத்தான்.

சீட்டைப் பார்த்த மாஜிஸ்டிரேட், சிறிது நேரம் யோசனை செய்தார். ''யார் அது? முருகேசன்! எந்த முருகேசன்?''

''கொஞ்சம் உயரமாக, நோயில் விழுந்தவன் போல இருக்கிறுன், ஸார்!'' சேவகன்கூறினுன்.

''ஓஹோ! அவனு? சரி, சரி! இங்கே அனுப்பு அவனை!''

சேவகன் சென்றுன் - சிறிது நேரத்தில் முருகேசன் வந்தான்.

மாஜிஸ்டிரேட் உற்றுநோக்கினுர் அவனை. ''என்னப்பா! நீதானே அந்தக் கார்விபத்தில் உன் முதலாளிக்கு விரோதமாக சாட்சி சொன்னுய்?''

''ஆமாம், ஸார்!''

''அன்றைய தினமே உன் தைரியத்தை நான் மெச்சினேன். அப்படி பயப்படாமல் உண்மை பேசக்கூடியவர்கள் தான் நம் நாட்டிற்கு வேண்டும். சுயநலத்திற்காக எந்தப் பொய்யையும் துணிந்து சொல்பவர்களைக் கண்டால் எனக்குக் கொஞ்சமும் பிடிக்காது. உம்......, இப்பொழுது நீ என்ன வேலைசெய்கிறுய்?''

''வேலைக்காகப் பல நாட்கள் அலைந்தேன், கிடைக்கவில்லை. வேலை தருவதற்குத் தயாராக இருந்த சிலரையும் என் மாஜி முதலாளி என்னென்னவோ சொல்லிக் கெடுத்துவிட்டார். அதனால் பசிக்கும், நோய்க்கும் ஆளானேன். கடைசியில் தற்கொலை செய்துகொள்வதற்கு முயன்றேன். அதிலும் தோல்வியடைந்தேன். போலிஸார் என்மீது வழக்குத் தொடர்ந்தனர். ஆனால் எனது பரிதாபக் கதையைக் கேட்ட நீதிபதி மனமிறங்கி, எச்சரிக்கை செய்து என்னை விடுதலை செய்தார். இனிமேல் தற்கொலை செய்வதில்லை என்று முடிவுசெய்து, மீண்டும் வேலைக்காக அலைந்து கொண்டிருக்கிறேன். தற்செயலாக தங்கள் ஞாபகம் வந்தது, இங்கு வ ந் தே ன்.'' குரல் நடுங்கக் கூறினான் முருகேசன்.

மாஜிஸ்டிரேட் மகாதேவனின் மனம் உருகி விட்டது. சிந்தித்தார். ''ஒரு வேலை இருக்கிறது. ஆனால் உனக்குப் பிடிக்குமா என்றுதான் யோசனை செய்கிறேன்.''

முருகேசனின் முகம் மலர்ந்தது. ''ஸார்! நான் எந்த வேலையாக இருந்தாலும் செய்யத் தயார். நரகத்தில் வேலைகிடைத்தாலும் நான் போகிறேன்.'' உணர்ச்சியோடு உரைத்தான் அவன்.

''அந்தமான் தீவுக்குப் போகவேண்டும்; உன்னால் முடியுமா?''

சம்மதித்தான் முருகேசன்.

வேலையின் தன்மை, சம்பளம், நிபந்தனை ஆகியவைகளைப் பற்றி விவரித்துக் கூறினார் மகாதேவன்.

முருகேசன் பின்னடையவில்லை, மகிழ்ந்தான். தன்னை அதிர்ஷ்டசாலியாகவே கருதினான். ஆஸ்பத்திரியில் இருக்கும்பொழுது நர்ஸ் கூறிய விஷயம் அவன் நினைவிற்கு வந்தது. அவள் சொல்லியது போல அவனுக்கும் ஒரு நல்ல எதிர்காலம் கிடைத்துவிட்டதே! தற்கொலை செய்து கொள்வதற்கு முயன்ற அவனுக்குச் சந்தோஷமான வாழ்க்கை ஏற்படப்போகிறது. அந்தமான் தீவு தான், அதனால் என்ன?

அன்று உலகத்திற்குப்பாரம், உபயோகம் அற்றவன் என்று தன்னைக் கருதினான் அவன். இன்று? அந்தமான் தீவில் ஓர் அதிகாரியாகப் போகிறான்!

மொத்தத்தில், இந்த நாட்டை விட்டுக் கடல் கடந்து செல்கிறோம் என்பது ஒன்றே பெரும் ஆறுதலாகயிருந்தது அவனுக்கு.

"எப்பொழுது புறப்படவேண்டும், ஸார்!" ஆவலோடு கேட்டான் முருகேசன்.

"இன்னும் ஒரு வாரத்திற்குள் உன்னை அனுப்புவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்துவிடுகிறேன். அதுவரையில் என்ன செய்வது என்று நீ தயங்கவேண்டாம். உன் செலவிற்காக ஐம்பது ரூபாய் நான் தருகிறேன். அவசியமான துணிமணிகளையெல்லாம் வாங்கிக் கொள்!"

"இந்த நன்றியை நான் என்றும் மறக்க மாட்டேன், ஸார்!" முருகேசனின் குரல் தளுதளுத்தது.

"ஒரு வாரம் கழித்து வந்து என்னை பார்!" என்று சொல்லி ஐம்பது ரூபாயையும் முருகேசனிடம் கொடுத்தார் மகாதேவன்.

பணத்தைப் பத்திரமாக ஜேபியில் வைத்துக் கொண்டு, மாஜிஸ்டிரேட்டிடம் விடை பெற்று வெளியே வந்தான் முருகேசன். அவன் மனதில் என்னென்னவெல்லாமோ கற்பனைகள் அலை யலையாய் எழுந்தன. அந்த ஒரு வாரத்தையும் எப்படிக் கழிப்பது என்பது பெரும் பிரச்னை யாகப் போய்விட்டது. அந்த ஊரில் ஒரு க்ஷணம் கூட தாமதிக்கக் கூடாது என்று அவனுக்குத் தோன்றிற்று.

இறுதியில், நன்கு யோசனை செய்து ஒரு முடிவுக்கு வந்தான் முருகேசன். அந்த ஒரு வாரத்திற்குள் சென்னைக்குப் போய்த் திரும்பி விடுவது! இதுதான் அவன் செய்த முடிவு. காரணம்? பல பல!

o o o

சென்னை கடற்கரையின் அருகாமையில் இருந்த ஆனந்த விலாஸ் பங்களா, கடற்காற்றை அள்ளி விழுங்கிக் கொண்டிருந்தது. எழுபது வயதுடைய ஒரு கிழவி, உள்ளே கட்டிலில் படுத் திருந்தாள். அவள் பெயர் சுந்தராம்பாள். அவள் கையில் ஒரு கடிதம் இருந்தது. தூசி படிந்த மூக்குக் கண்ணாடியைத் துடைத்துவிட்டுக் கொண்டு, கடிதத்தை உன்னிப்பாகக் கவனித் தாள் அவள். படித்து முடிந்ததும் அவளது சிந்தனை சுழன்றது.

சுந்தராம்பாள், காலஞ் சென்ற நீதிபதி நீலமேகத்தின் தர்மபத்தினி. பிள்ளைப் பேறில் லாத அபாக்கியவதி. அந்தக் குறையைப் போக்கிக்கொள்வதற்காக, பெற்றோர்களை இழந்துவிட்ட நம்பிராஜனை வளர்த்தனர் அத் தம்பதிகள். கல்யாணியை அவனுக்கு மண முடித்து வைத்ததும் அவர்கள்தாம்.

இளந் தம்பதிகள் இன்பமாக வாழ வேண்டும் என்ற உயரிய நோக்கம்கொண்ட நீலமேகம், திருநெல்வேலியிலுள்ள தனது சொந்த வீட்டை நம்பிராஜனுக்கு அளித்து, அவனுடைய செலவுகளுக்குப் போதிய பணமும் தந்தார். கல்யாணியின் பண்பினாலும், பராமரிப்பினாலும் நம்பிராஜனின் இல்லற வாழ்க்கை இனிதாகவே நடந்துகொண்டிருந்தது.

நீலமேகம், அடிக்கடி திருநெல்வேலிக்குச் செல்வார். நம்பிராஜனையும்—கல்யாணியையும் பார்த்து வருவார். நம்பிராஜனும் தன் மனைவி கல்யாணியுடன் சென்னைக்கு வந்து ஆனந்த விலாஸில் சில மாதங்களைக் கழிப்பான்; மீண்டும் திருநெல்வேலிக்குச் சென்றுவிடுவான். இவ்வாறு எட்டு வருடங்கள் எப்படியோ உருண்டோடிவிட்டன.

நீலமேகம் இறந்தார். நம்பிராஜன் விமலாவுடன் தொடர்பு கொண்டான். கல்யாணி, தன் பிறந்தகமான மதுரைக்குச் சென்றாள். அவளைத் திருப்பி அழைக்கவேயில்லை நம்பிராஜன். ஒரு வருடம் பூர்த்தியாகிவிட்டது.

இப்பொழுது கல்யாணியும்—நம்பிராஜனும் சென்னையில் ஆனந்த விலாஸில் சந்திக்கப் போகிறார்கள். விமலாவும், நம்பிராஜனுடன் சென்னைக்கு வரப்போகிறாள். சுந்தராம்பாளின் கையிலிருந்த கடிதத்தில் கண்டிருந்த விஷயம் அதுதான்! அதைப்பற்றித்தான் சிந்தித்துக் கொண்டிருந்தாள் சுந்தராம்பாள்.

சுந்தராம்பாளின் அறைக்குள் வந்தாள் சித்ரா.

சித்ரா, இளம் விதவை. இருபத்தைந்து வயதுதான் இருக்கும். அழகி, நன்றாகப்

படித்தவள். சுந்தராம்பாளுக்குத் தூர உறவினள். அவளும் திருநெல்வேலியைச் சேர்ந்தவள்தான். நீலமேகம் இறந்தபின்னர் அவள்தான் சுந்தராம்பாளுக்கு மகளாகவும், வேலைக்காரியாகவும், தோழியாகவும் இருந்து வந்தாள்.

"என்னம்மா, யோசனை செய்கிறீர்கள்?" சித்ரா கேட்டாள்.

"நம்பிராஜனுக்கு நாம் ஒரு கடிதம் எழுதினோம் அல்லவா? அதற்குப் பதில் எழுதியிருக்கிறான் அவன்!"

"என்ன எழுதியிருக்கிறார்?"

"அந்தக் கழுதையையும் கூட்டிக்கொண்டு இங்கு வரப்போகிறானாம்!"

"யார், விமலாவையா?"

"ஆம்!......கல்யாணியும் வரப்போகிறாள். என்னவாகுமோ என்று எனக்குப் பயமாகயிருக்கிறது."

"ஏன்? கல்யாணியும்-விமலாவும் மோதிக்கொள்வார்கள் என்று நினைக்கிறீர்களா?"

"கல்யாணியைப்பற்றி எனக்குப் பயமில்லை. அவள்தான் தங்கமான பெண்ணாயிற்றே? ஆனால் அந்த ராங்கி சும்மாயிருப்பாளா? நன்றாகயிருந்த குடும்பத்தைக் கெடுத்தவளாயிற்றே அவள்?" சொல்லிப் பெருமூச்சு விட்டாள் சுந்தராம்பாள்.

சித்ரா, பல சமாதானங்கள் சொல்லிச் சுந்தராம்பாளுக்குத் தைரியம் அளித்தாள்.

° ° °

"குட்மார்னிங், ஸார்!"

"குட்மார்னிங்!...நீ யார் தம்பி?"

''என்னைத் தெரியவில்லையா, 'ஸார்? கைலாசம் பிள்ளையின் மகன் ஜெகதீசன் நான் தான், ஸார்!''

''ஓஹோ! கல்யாணியின் அத்தை மகன் ஜெகதீசனா? நீ கொழும்பில் இருப்பதாகக் கேள்விப்பட்டேனே?''

''ஆமாம், ஸார்! கடந்த எட்டு வருடங்களாக கொழும்பில்தான் இருந்தேன். இங்கு வந்து பத்து நாட்கள் ஆகின்றன. சென்னையில் ஏதாவது ஒரு வேலைக்கு முயற்சி செய்யலாம் என்று நினைக்கிறேன். வேலை கிடைக்கும் வரையில் தங்குவதற்கு ஏதாவது ஓர் இடம் வேண்டுமே? நீதிபதி நீலமேகத்தின் விலாசத்தை உங்களிடம் கேட்டுத் தெரிந்துகொள்ளலாம் என்று வந்தேன்.''

அட்வகேட் அதிசயம் பிள்ளை, மூக்கின் முனைக்குக் கண்ணாடியை நகர்த்திவிட்டுக் கொண்டு ஜெகதீசன்மீது கருட பார்வையை வீசினார். ''ஏன், தம்பி! நீலமேகத்தின் பங்களா, திருநெல்வேலிக்காரர்களின் தர்மச் சத்திரமா என்ன? சென்னைக்குப் போகிறவர்களெல்லாம் அங்குதானே 'டேரா' அடித்துவிடுகிறார்கள்?''

ஜெகதீசன் சிரித்தான். ''நமக்குத் தெரிந்த இடத்திற்குத்தானே நாம் போக முடியும், ஸார்? கல்யாணியிடம் கேட்டு விலாசத்தைத் தெரிந்து கொள்ளலாம் என்று நினைத்தேன்; அவள் அங்கு இல்லையாம். நம்பிராஜனும் ஊரில் இல்லை. வேறு யாரோ புதிதாக ஒரு பெண் இருக்கிறாள். அவளிடம் பேசுவதற்கே எனக்குப் பயமாக இருக்கிறது. அதனால் உங்களிடம் வந்தேன்.''

விலாசத்தை ஒரு காகிதத்தில் எழுதி ஜெகதிசனிடம் கொடுத்தார் அட்வகேட் அதிசயம் பிள்ளை. "எனக்கும் சென்னையில் கொஞ்சம் வேலையிருக்கிறது. ஆனந்த விலாஸில் தங்கலாம் என்று நினைத்திருந்தேன். இப்பொழுது அந்த யோசனையை நான் மாற்றிக் கொள்ளவேண்டியிருக்கிறது. உன்னைப்போல் இன்னும் எத்தனைபேர்கள் அங்கு இருப்பார்களோ தெரியவில்லையே! ஏதாவது ஒரு ஹோட்டலில்தான் நான் தங்கவேண்டும்போலிருக்கிறது?" மிகவும் சலிப்புடன் உரைத்தார் அவர்.

ஜெகதிசன் மெதுவாக நழுவினான்.

o o o

இன்ஸ்பெக்டர் பாண்டியன், காரிலிருந்து இறங்கித் தன் வீட்டிற்குள் காலடி வைத்தார். அவருடைய முகம் மிகவும் சோர்வடைந்திருந்தது.

கணவனைக் கண்ட கமலா, "ஏன், ஒரு மாதிரியாக இருக்கிறீர்கள்?" என்று வியப்புடன் வினவினாள்.

சாய்வு நாற்காலியில் 'தொப்'பென்று விழுந்தார் பாண்டியன். கமலாவின் பீதி அதிகரித்துவிட்டது. கணவன் அருகில் சென்றாள். கையைப் பிசைந்துகொண்டு, "என்ன, என்ன நடந்தது?" என்றாள் கலவரத்துடன்.

"என் கோட்டையெல்லாம் இடிந்து போய் விட்டது, கமலா. இரண்டு மாதங்கள் ரஜாவுக்கு எழுதியிருந்தேன் என்று உன்னிடம் சொன்னேனே அல்லவா?"

"ஆம்! ரஜா கிடைக்கவில்லையா?"

"கிடைக்காதுபோனால் பரவாயில்லையே!"

"பின் என்ன?"

"என்னைச் சென்னைக்கு மாற்றிவிட்டார்கள். இன்னும் நாற்பத்தெட்டு மணி நேரத்திற்குள் நான் சென்னையில் இருக்கவேண்டும். ஜில்லா சூப்பிரண்டெண்ட் உத்திரவு."

"அப்பாடா! இதற்குத்தானு இவ்வளவு பயமுறுத்திவிட்டீர்கள்? நான் என்னவோ ஏதோ வென்று பயந்தே போய்விட்டேன்." பெருமூச்சு விடுத்தாள் கமலா.

"இதோ பார்! இந்த வருடம் ரஜா கிடைத்தால் நான் என்னவெல்லாம் செய்வதாகத் திட்டம் போட்டிருந்தேன் தெரியுமா? நானும் உன்னை மணந்து இருபது வருஷங்களுக்கு மேலாகிறது. நாம் இருவரும் சேர்ந்து எந்த ஊருக்காவது சென்றதுண்டா? அந்தக் குறையை இந்த வருடம் தீர்த்துவிடவேண்டும் என்று நினைத்திருந்தேன். குடும்பத்தோடு பல ஸ்தலங்களைச் சுற்றிப் பார்க்கவேண்டும்; நம் சரோஜாவைச் சென்னையிலேயே ஒரு பள்ளிக்கூடத்தில் சேர்த்துவிடவேண்டும்; பதினைந்து நாட்கள் நாமும் அங்கேயே தங்கி பட்டணத்தையெல்லாம் உனக்கு காண்பிக்கவேண்டும் என்றெல்லாம் எண்ணியிருந்தேன். அதெல்லாம் தவிடுபொடியாகிவிட்டது! நாளை மத்தியானம் எக்ஸ்பிரஸில் நான் கிளம்பவேண்டுமாம்."

"பருத்தி புடவையாகக் காய்த்ததுபோலாயிற்று! நாம் குடும்பத்தோடு சென்னைக்கு போய்விடலாமே?" சந்தோஷத்தோடு பகர்ந்தாள் கமலா.

"நீ ஒரு பைத்தியம்!. சென்னையில் வீடு கிடைப்பது அவ்வளவு சுலபம் என்று நினைத்துக் கொண்டாயா என்ன? நமக்குத் தகுதியான வீடு

கிடைப்பதற்கு ஒரு மாதம் ஆனாலும் ஆகலாம் அல்லது ஒரு வருஷம் ஆனாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை. அதனால்தான் எனக்கு என்ன செய்வதென்றே தோன்றவில்லை.''

''அதற்குக் கவலைப்பட்டால் காரியம் நடந்து விடுமா? நம் அதிர்ஷ்டம் பட்டணத்திற்காவது மாற்றினார்கள். சில சர்க்கார் உத்தியோகஸ்தர் களை எங்கெங்கோ தண்ணீர் இல்லாத காட்டிற் கெல்லாம் மாற்றிவிடுகிறார்களே? போய் வேலையை ஒப்புக்கொண்டதும் கொஞ்சம் தீவிர மாக முயற்சி செய்தால் வீடு கிடைக்காமல் போய்விடாது!'' கணவனுக்குத் தைரியம் அளிக் கும் முறையில் கூறினாள் கமலா.

இன்ஸ்பெக்டர் பாண்டியன், தன் மனைவி யின் அறியாமையை நினைத்துத் தலையில் அடித்துக்கொண்டார். ரஜா கிடைத்துவிடும் என்ற நம்பிக்கையில் அவர், சென்னையிலுள்ள சுந்தராம்பாளுக்குக் கடிதம் எழுதியிருந்ததைக் கூடத் தன் மனைவியிடம் சொல்லவில்லை. ரஜா உத்திரவு என்று நினைத்து சந்தோஷத்தோடு கடிதத்தைப் பிரித்து 'டிரான்ஸ்பர் உத்திரவு' என்று தெரிந்ததும் அவர் அடைந்த ஏமாற்றத்தை அவளிடம் கூறினால் அவளால் எப்படிப் புரிந்துகொள்ள முடியும்?

## அணைந்த தீ எரிந்தது

சென்னை-எழும்பூர் ரெயில் நிலையத்தை அடைந்த திருநெல்வேலி எக்ஸ்பிரஸிலிருந்து, மூட்டை முடிச்சுகளுடன் 'திபு, திபு' வென்று பிரயாணிகள் இறங்கினர். தங்கள் தங்கள்

உறவினர் - பந்து - மித்திரர்களை அழைத்துச் செல்வதற்கு வந்திருந்தவர்களின் எண்ணிக்கையும், போர்ட்டர்களின் கும்பலும் சேர்ந்து பிளாட்பாரத்தில் எள் விழுவதற்குக்கூட இடம் இல்லாமல் நிரம்பியிருந்தது. இந்தக்கூட்டத்தின் மத்தியில் வளைந்து, நெளிந்து, புகுந்து வேகமாகச் சென்றுகொண்டிருந்தாள் ஒருபெண். அவளது கண்கள் யாரையோ தேடி, ரெயிலிலிருந்து இறங்கும் ஒவ்வொருவரது முகத்தையும் கூர்ந்து கவனித்தன.

அந்தப்பெண் வேறுயாருமல்ல, சித்ராதான்! அவள் யாரை எதிர்பார்த்தாளோ அவர்கள் அந்த ரெயிலில் வந்ததாகத் தெரியவில்லை. எஞ்சினிலிருந்து கடைசி வண்டிவரையில் பார்த்துவிட்டாள். ஆனால் திரும்பி வரும் பொழுது, அவள் எதிர்பாராத ஜெகதீசனைக் கண்டுவிட்டாள், அவனும் அவளை நோக்கினான்.

இருவரும் க்ஷணநேரம் மௌனமாக நின்றனர். அவர்களது கண்கள் மாத்திரம் ஏதேதோ பேசிக்கொண்டன.

''யாரைத்தேடுகிறாய் சித்ரா?'' ஜெகதீசன் தடுமாற்றத்துடன் வினவினான்.

''இன்ஸ்பெக்டர் பாண்டியனின் மனைவியும், மகளும் இந்த வண்டியில் வந்தார்களா?'' ஒரு திறுசாக நிலைமையைச் சமாளித்துக் கொண்டு பேசினாள் சித்ரா.

''இல்லை! அவர்களைப் பார்க்கத்தான் வந்தாயா?''

''ஆம்! நீங்கள்.........?''

''ஆனந்த விலாஸிற்குத்தான் போக வேண்டும். எப்படி அந்த இடத்தைக் கண்டு பிடிப்பது என்று பயந்துகொண்டே வண்டியை

விட்டு இறங்கினேன். உன்னைப் பார்த்ததும் எனக்கு உயிர் வந்தாற்போல் ஆகிவிட்டது.''

''சரி, போவோம் வாருங்கள்!'' பூமியைப் பார்த்த வண்ணம் அழைத்தாள் சித்ரா.

சித்ராவைப் பின் தொடர்ந்து சென்றான் ஜெகதீசன். அவனது பெட்டி, படுக்கைகளை ஒரு போர்ட்டர் தூக்கிச் சென்றான்.

இருவரும் பிறர் சந்தேகிக்கும் வண்ணம் ஒரு மாதிரியாக நடந்துகொண்டதற்குக் காரணம் இல்லாமலில்லை.

சித்ரா, கன்னியாயிருந்த பொழுது ஜெகதீசனை மணந்துகொள்ள வேண்டும் என்று ஆசைப்பட்டாள். அவளுடைய பெற்றோர் களும் அவனை மருமகனைப் பெறுவதற்கு எவ்வளவோ முயன்றனர். ஆனால் அவன், தனது அத்தை மகள் கல்யாணியின் மீது காதல் கொண்டிருந்தான். அதனால் சித்ராவை நிராகரித் தான். நம்பிக்கையிழந்துவிட்ட சித்ரா வேறொரு வனை மணந்தாள். விதியின் சதியால் அவளது தாம்பத்ய வாழ்க்கை அற்பாயுளாக முடிந்து விட்டது.

சுந்தராம்பாளின் முயற்சியினால் கல்யாணி, நம்பிராஜனின் மனைவியாக்கப்பட்டாள். பெரும் ஏமாற்றம் அடைந்தான் ஜெகதீசன். வாழ்க்கை யிலேயே அவனுக்கு வெறுப்புத் தோன்றி விட்டது. வெகுநாட்கள் வரையில் பைத்தியம் பிடித்தவன்போல அலைந்தான். பின்பு, கொழும் பிற்குச்சென்றான். ரப்பர் தோட்டத்திலும், ஐஸ் கிரீம் கம்பெனிகளிலும் வேலை செய்து எட்டு வருடங்களைக் கழித்தான். அதற்குள் அவனது மனநிலையும் ஒருவாறு சரிப்பட்டுவிட்டது. ஊரின்மீது ஆசைபிறந்தது; புறப்பட்டு வந்து

விட்டான்.- இதுதான் அவனுடைய கடந்தகாலச் சரித்திரம்.

ஆகவே, ஜெகதீசனைக் கண்டதும் சித்ரா வின் மனம் எட்டு வருடங்களுக்கு முந்திய தனது கன்னிப் பருவத்திற்குப் பறந்தோடிற்று. துக்கம் அவள் தொண்டையை அடைத்தது. தனது கணவனாக வரித்த ஜெகதீசனை இன்று விதவை யாகச் சந்திக்க நேர்ந்ததே என்று அவளால் நினைக்காமல் இருக்க முடியவில்லை. அதே சிந்தனையோடு தான் நடந்தாள் சித்ரா.

சித்ரா, விதவை என்பது அவளுக்குத்தான் தெரியும். ஆம்! ஜெகதீசனுக்கும் தெரியும். ஆனால் அவளைப் பார்த்தவர்கள் யாரும் அவ்வாறு நினைக்கவே முடியாது. நகரத்தின் நாகரிக முறைப்படி பட்டுப் புடவையும் அணிந்து, நெற்றியில் பொட்டும் வைத்திருந்தாள்; பூ மாத்திரம் முடிக்கவில்லை.

''சித்ரா!'' பின்னால் வந்த ஜெகதீசன் குரல் கொடுத்தான்.

திரும்பிப் பார்த்தாள் அவள்.

ஜெகதீசன், ''நாம் ரொம்ப தூரம் போக வேண்டுமா?'' என்றான்.

''ஆம்! மயிலாப்பூரைத் தாண்டி, ஸாந் தோமுக்குப் போகவேண்டும். இங்கிருந்து ஐந்துமைல் இருக்கும். கார் கொண்டு வந்திருக் கிறேன்; அதிலேயே நாம் போய்விடலாம்.''

காரின் பக்கம் சென்றாள் சித்ரா. ஜெகதீச னின் பெட்டி, படுக்கைகளைப் பின் ஆசனத்தில் வைகக்கும்படிச் சொன்னாள். முன் ஆசனத்தின் கதவைத்திறந்து அதில் ஜெகதீசனை உட்காரும் படி சமிக்ஞை செய்தாள்.

டிரைவர் எங்கே?'' ஜெகதீசன் ஆசனத் தில் அமர்ந்து கேட்டான்.

சித்ரா, சிரித்துக்கொண்டே வந்து டிரை வரின் ஆசனத்தில் அமர்ந்து காரை 'ஸ்டார்ட்' செய்தாள்.

ஜெகதீசன் ஆச்சரியமடைந்தான். ''உனக்கு கார் ஓட்டத் தெரியுமா?''

''தெரியாமல் ஓட்டமுடியுமா?'' புன்னகை யுடன் பதிலிறுத்தாள் அவள். காரை லாவகமாகச் செலுத்தினுள்.

ஐந்து நிமிஷங்கள் வரையில் சித்ராவின் மீது வைத்த விழியை வாங்காமல் பார்த்துக் கொண்டேயிருந்தான் ஜெகதீசன். அவளிடம் பேசவேண்டும்போல் தோன்றிற்று அவனுக்கு.

''சித்ரா! சுந்தராம்பாள் சௌக்யியந் தானே?''

''ஆம்! கல்யாணியும் இங்கு தான் இருக்கிருள்......''

''ஆ! நிஜமாகவா! அதனுல் தான் அவளை ஊரில் பார்க்கமுடியவில்லை?''

''அது சரி......, நீங்கள் கொழும்பிலிருந்து எப்பொழுது வந்தீர்கள்?''

''இரண்டு வாரங்கள் ஆகின்றன.''

''சரிதான்! அதனுல்தான் உங்களுக்கு விஷயம் தெரியவில்லை.''

''என்ன ?''

''நம்பிராஜன் வேறு கல்யாணம் செய்து கொண்டான், தெரியுமோ?''

கார், மவுண்ட்ரோட்டில் சென்றுகொண்டு இருந்ததால் திரும்பிப் பார்க்காமலே பேசினுள்

சித்ரா. அதனுல் ஜெகதீசனின் முகத்தில் எற்பட்ட மாறுதலை அவள் கவனிக்கவில்லை.

''நம்பிராஜன் வேறு மணம் செய்து கொண்டானு! அப்படியானுல் கல்யாணியின் கதி?'' துக்கம் ததும்பும் குரலில் வினவினுன் ஜெகதீசன்.

''வாழாவெட்டியாக இருக்கிருள்!''

ஜெகதீசன் விடுத்த பெருமூச்சு சித்ராவின் காதில் தெளிவாக விழுந்தது. நைஸாகத் திரும்பிப்பார்த்தாள் அவள். ''தன் புதிய மனைவி விமலாவுடன் நம்பிராஜனும் ஆனந்த விலாஸிற்கு வந்திருக்கிருன்.'' ஜெகதீசனின் மனே நிலையைச் சோதனை செய்வதற்காகவே இதைக் கூறினுள் சித்ரா.

''அட, கண்ட்ராவியே! தன் புருஷன் இன்னெரு பெண்ணுடன் கொஞ்சிக் குலாவு வதைக் கல்யாணி எப்படிச் சகித்துக் கொண்டு இருக்கிருள்?''

'' ஹீ... ஹீ... ஹீ...! அவள் சகித்துக் கொண்டிருப்பது பெரிய விஷயம் அல்ல; அந்தப் பெண் விமலாவுடன், கல்யாணி சர்வசாதாரண மாகப் பேசிப் பழகுகிருள்! தன் கணவனிடமும் சந்தோஷமாகத்தான் நடந்து கொள்கிருள். கொஞ்சமும் அவள் கவலைப்படுவதாகவே தெரியவில்லை.''

''ஆச்சர்யம்! என்னுல் நம்ப முடிய வில்லையே?''

''நான் பொய் சொல்கிறேன் என்று நினைக் கிறீர்களா? இன்னும் சிறிது நேரத்தில் உங்கள் கண்ணுலேயே பார்த்துக் கொள்ளுங்களேன்! ஆனுல், கல்யாணியின் போக்கு எனக்கு ரொம்பவும் பயமாக இருக்கிறது. மேற்

பார்வைக்கு அவள் கவலைப்படாதவள் போல இருந்தாலும், அவள் உள்ளம் எரிமலைபோல குமுறிக் கொண்டிருக்கிறது என்பதை பல தடவைகள் நான் உணர முடிந்தது. அவள் மனதிற்குள் பெரும் புயல் வீசிக்கொண்டிருக் கிறது—ஏதோ ஒரு பெரிய திட்டம் மறைந்திருக் கிறது என்பது என் அபிப்பிராயம்.''

ஜெகதீசன் பதில் பேசவில்லை. எதையோ பற்றித் தீவிரமாகச் சிந்திக்க ஆரம்பித்தான்.

கார், ஆனந்த விலாஸிற்குள் நுழைந்து போர்ட்டிகோவில் நின்றது. சித்ரா, காரைவிட்டுக் கீழே இறங்கி, தோட்டக்காரன் கறுப்பையா வைக் கூப்பிட்டாள். ஜெகதீசனின் பெட்டி, படுக்கைகளைத் தூக்கிக்கொண்டுபோய் வீட்டிற்குள் வைக்கும்படிச் சொன்னாள். ஜெகதீசனைப் பார்த்து, ''அம்மா அறையில்தான் படுத்திருப்பார்கள்; போய்ப் பாருங்கள். நான் காரை 'ஷெட்'டில் விட்டு வருகிறேன்'' என்று சொல்லிவிட்டுக் காரை நகர்த்தினாள்.

ஜெகதீசன், வீட்டிற்குள் சென்றான்.

## இருதலைக் கொள்ளி

மாலைப்பொழுது. மஞ்சள் வெயில் மினு மினுத்துக் கொண்டிருந்தது. ஆனந்த விலாஸ் மொட்டை மாடிக்கு அலங்காரமாக அமர்ந்து இருந்தனர் இரு மங்கையர். ஓர் அறையில் மறைவாக நின்று அவர்களைக் கவனித்துக் கொண்டிருந்தான் ஜெகதீசன். அம் மங்கையர் கல்யாணியும், விமலாவும் தான்!

கல்யாணி, பால்கனிச் சுவர் ஓரமாக் உட்கார்ந்து, அலைவீசும் கடலைப் பார்த்துக் கொண்டிருந்தாள். அதில் தன் உள்ளத்தை அவள் கண்டாள் போலும்.

விமலா, பின்னல் சற்று விலகி உட்கார்ந்து கல்யாணியையே உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருந்தாள். அவளது முகத்தில் எள்ளும்-கொள்ளும் வெடித்தன.

அவ்விருவரையும் ஜெகதீசன் பார்த்தது யாருக்கும் தெரியாது.

கல்யாணியை இமை கொட்டாமல் சிறிது நேரம் நோக்கினன் ஜெகதீசன். எட்டு வருடங்களுக்கு முன்பு அவளிடம் அவன் கண்ட இளமையும், பொலிவும் கொஞ்சமும் குறை பட்டிருந்ததாக அவனுக்குத் தோன்றவில்லை. ஆம்! சற்று மெலிவுற்றிருந்தாள். முகம் கொஞ்சம் வெளுத்துப்போயிருந்தது.

மற்றொரு பெரிய மாறுதலையும் கல்யாணியிடம் கண்டான் ஜெகதீசன். அவள் இதயத்தில் ஏதோ ஒரு ரகசியம் புதைந்திருப்பதை அவளது முகம் பிரதிபலித்தது. அது என்ன ரக்சியமாக இருக்கும்? அவளுக்கு நேர்ந்துள்ள 'வாழாவெட்டி வாழ்க்கை'யைப் பற்றி அவனுக்குத் தெரியும். அதனல் அவள் துக்கம் அடைந்திருக்கலாம். ஆனல் அவளது வதனம் துக்கத்தைப் பரதிபலிக்கவில்லை; வேறு ஏதோ ஓர் உணர்ச்சியின் சாயல் படிந்திருந்தது. கைக்குள் எதையோ மறைத்து வைத்துக்கொண்டு, 'கையில் என்ன இருக்கிறது, சொல் பார்ப்போம்?' என்று சவால் விடும் சிறு குழந்தையின் நிலைக்கு ஒப்பாக அவளைச் சொல்லலாம்.

ஜெகதீசனின் பார்வை பெயர்ந்து விமலா வின் மீது பதிந்தது. ஆ! நாகப்பாம்பின் அழகைப் பெற்றிருக்கிறாளே! அவள் முகம் கடுகடுப்பாக யிருந்தது. அந்த நேரத்தில் அவள் கையில் ஒரு கத்தியிருந்தால், நிச்சமாகக் கல்யாணி கொலை யாகப்போகிறாள் என்று அவன் முடிவு செய் திருப்பான். அவள் எதற்காக அவ்வளவு வெறுப்புடன் கல்யாணியைப் பார்க்கிறாள்? அவனுடைய சந்தோஷத்திற்குக் குறுக்கே கல்யாணி நின்றால் வெறுப்படைவதில் நியாயம் இருக்கிறது. ஆனால் கல்யாணிதான் சந்நி-யாசியைப் போல நடந்துகொள்கிறாளே?

இவ்வாறு ஜெகதீசன் சிந்தனை செய்து கொண்டிருக்கும்பொழுது, மாடிப்படியில் யாரோ ஏறி வந்த காலடிச் சத்தம் கேட்டது. அதைத் தொடர்ந்து நம்பிராஜன் மாடிக்கு வந்தான். அவன் கையில் ஒரு கதைப் புத்தகம் இருந்தது. கல்யாணியும்-விமலாவும் அங்கே இருப்பார்கள் என்று அவன் எதிர்பார்க்கவில்லை. ஆதலால் இப்பொழுது, அந்தப் புத்தகத்தை யாரிடம் கொடுப்பது என்ற பிரச்னை அவன் மனதில் எழுந்தது.

சிந்தித்தான் நம்பிராஜன். ஒரு யோசனை தோன்றிற்று அவனுக்கு. இருவருக்கும் மத்தி யில் நின்றுகொண்டான். "துளசிங்கம் துப்பறி யும் நாவல் வேண்டுமா?" என்று பொதுவாகக் கேட்டான்.

விமலா ஆவலோடு, "இங்கே கொண்டு வாருங்கள்!" என்றாள். கல்யாணி, ஒன்றுமே பேசாமல் கையை மாத்திரம் நீட்டினாள்.

நம்பிராஜன் விழித்தான். இரு மனைவியரை யும் மாறி மாறிப் பார்த்தான். விமலாவிடம்

பயம் அவனுக்கு. கல்யாணியிடம் பச்சாத்தாபம். என்ன செய்வது? புத்தகத்தை யாருக்குக் கொடுப்பது?

"நான் கேட்பது உங்கள் காதில் விழவில்லையா?" விமலா கத்தினாள்.

கல்யாணி, கையை இழுத்துக்கொண்டாள். கணவனை ஏறிட்டு நோக்கினாள். "நீங்கள் என்னிடந்தான் கேட்டீர்கள் என்று நான் நினைத்துவிட்டேன்" என்றாள்.

மறைவாக நின்று அந்தக் காட்சியைக் கவனித்துக்கொண்டிருந்த ஜெகதீசன் எட்டி யெட்டிப் பார்த்தான். நம்பிராஜன் என்ன செய்யப் போகிறான் என்பதை அறிய அவன் மனம் துடித்தது.

சிறிது நேரம் கண்களை மூடினான் நம்பிராஜன். அவன் மனத்தில் என்ன தோன்றியதோ, 'விர்'ரென்று கல்யாணியின் அருகில் சென்று புத்தகத்தைக் கொடுத்துவிட்டான்!

அடுத்த விநாடியில் 'டமீல்!' என்று ஒரு சத்தம் வந்தது. விமலா உட்கார்ந்திருந்த நாற்காலி பூமியில் சாய்ந்தது. ஆம்! தன் கோபத்தை நாற்காலியிடம் காண்பித்தாள் விமலா. கழுத்து சுளுக்கிக்கொள்ளும்படியாக முகவாய்க் கட்டையைத் தன் தோளில் இடித்துக்கொண்டாள். 'விடு,வி'டென்று நடந்து மாடியை விட்டுக் கீழே இறங்கினாள்.

"நன்றிகெட்டவன்! அவனை என்னபாடு படுத்துகிறேன், பார்! அந்தச் சிறுக்கியையும் தொலைத்தால் தான் நிம்மதி ஏற்படும்!"— இவ்வாறு விமலா முனகிக்கொண்டே சென்றது ஜெகதீசனின் காதில் தெளிவாக விழுந்தது.

நம்பிராஜன், விமலாவைப் பின்பற்றிச் சென்ருன்.

மறைந்து நின்ற ஜெகதீசன், கல்யாணியை நோக்கி நகர்ந்தான்!

o o o

# வேல் பாய்ந்த புலி

படுக்கை அறையில், கட்டிலில் கிடந்து பொருமிக் கொண்டிருந்தாள் விமலா. நம்பிராஜன் மெதுவாக அவள் பக்கத்தில் நெருங்கினன். காலடிச் சத்தத்தைக் கேட்ட விமலா, தலையைத் தூக்கினள். கண்ணுல் எரித்து விடுவது போல அவனைப் பார்த்தாள்.

"இங்கு எதற்காக வந்திருக்கிறீர்கள்? போங்கள்! அவளிடமே போய் இருந்து கொள்ளுங்கள்!" அவமானத்தால் ஏற்பட்ட துக்கத்தை ஆத்திரமாக மாற்றிப் பேசினள் விமலா.

"விமலா!" கோபத்தை அடக்கிக்கொண்டு அழைத்தான் நம்பிராஜன். "உனக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதா என்ன? இப்பொழுது என்ன நடந்துவிட்டது, இப்படிக் கத்துகிருய்?"

"அந்தப் புத்தகத்தை அவளுக்கு ஏன் கொடுத்தீர்கள்?"

"இந்தச் சிறிய விஷயத்திற்காகவா இவ்வளவு ஆத்திரம்?"

"நான் வாய்விட்டுக் கேட்டும் எனக்குத் தராமல் அவளுக்குக் கொடுக்கக் காரணம்

என்ன?'' குரலைக் கொஞ்சமும் மாற்றாது அதே ரீதியில் பேசினாள் அவள்.

''அவள் கேட்டாள், கொடுத்தேன்!''

''நானுந்தான் கேட்டேன், ஏன் தரவில்லை?''

''ஒரு புத்தகத்தை இரண்டு பேருக்கும் எப்படிக் கொடுப்பது?''

''ஓஹோ! அவள் என்னைவிட உயர்ந்தவளாகப் போய்விட்டாள்; அதனால் அவளுக்குக் கொடுத்து விட்டீர்கள் இல்லையா?''

''இன்று என்னவோ உன்புத்தி சரியான நிலையில் இல்லை. நாம் அடுத்தவர்கள் வீட்டில் தங்கியிருக்கிறோம் என்பதைக்கூட யோசனை செய்யாமல் இப்படிக் கத்துகிறாயே? உனக்குக் கொஞ்சமும் நாகரிகமாக நடந்துகொள்ளத் தெரியவில்லை!''

''ஆம்! அப்படித்தான் வைத்துக்கொள்ளுங்கள். நாகரிகமாக நடக்கத் தெரிந்தவளிடம் போகிறதுதானே? என்னை, வேண்டுமென்றே நீங்கள் அவமானப் படுத்திவிட்டீர்கள்! அவளைவிட நான் அவ்வளவு கேவலமானவளா என்ன?''

நம்பிராஜன், விமலாவை சாந்தப்படுத்துவதற்கு முயன்றான். ''இதோ பார்! அவள் உன்னை விடப் பெரியவள். மிகவும் நொந்து போனவள். நான் காசு பணத்தையா வாரி அவளுக்குக் கொடுத்துவிட்டேன்? கேவலம் ஒரு கதைப் புத்தகம். அதைப்போல ஆயிரம் புத்தகங்கள் உனக்கு வாங்கித் தருகிறேன்! போதுமா?''

''யாருக்கு வேண்டும் உங்கள் புத்தகம்? அந்தக் கள்ளி என்னைத் தோற்கடித்துவிட்டாள்.

ங்களும் அவள் பக்கம் சேர்ந்துகொண்டீர்கள்.'' முகத்தை மூடிக்கொண்டு அழுதாள் விமலா.

நம்பிராஜன் பொறுமை யிழந்துவிட்டான். ''சீ, சீ! பொறுமை பிடித்த சிறுகுழந்தை போலப் பேசாதே! நான்கு பேர்கள் மத்தியில் கொஞ்சம் கண்ணியமாக அடக்க ஒடுக்கமாக நடந்து கொள்வதற்குப் பழகிக்கொள்!''

''அவள் நடந்துகொள்கிறாளே, அதைப் போல என்னையும் நடக்கச் சொல்கிறீர்களா?''

''கல்யாணியோடு பத்துவருஷங்கள் நீ பழகினாலும் அவளைப்போல கௌரவமாக உன்னால் நடந்துகொள்ள முடியாது!''

''அடடே! அவ்வளவு தூரத்திற்கு உங்களை மயக்கிவிட்டாளா அவள்?''

''உளறாதே, விமலா! கொஞ்சம் சிந்தித்துப் பேசு! உன் போக்கு எனக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை.'' வெறுப்புடன் உரைத்தான் நம்பிராஜன்.

''எப்படிப் பிடிக்கும்?'' என்று சொல்லி விட்டுச் சிறிதுநேரம் மௌனமாக யிருந்தாள் விமலா. பின்பு, தன் தொனியை மாற்றி, ''சரி, சரி! இந்த இடம் நமக்கு ஒத்து வராது. நாம் நாளைக்கே ஊருக்குக் கிளம்பி விடுவோம்'' என்றாள்.

"அதற்குள்ளாகவா? நாம் வந்து நான்கு தினங்கள்தானே ஆகின்றன?''

''போதும், போதும்! இருந்தநாள்போதும்!''

நம்பிராஜன் தலையை உருட்டினான். ''நாம் திடீரென்று புறப்பட்டால் என் பெரியம்மாள் மிகவும் வருத்தப்படுவாள். பதினைந்து நாட்கள் இருக்கப் போவதாக நான் அவளிடம் சொல்லி

விட்டேன். அதனால் பதினைந்து நாட்கள் இருந்து விட்டுத்தான் நான் வரப்போகிறேன்.''

''ஊ......ஹூம்! தெரிகிறது! கல்யாணிக்கு வாக்குக் கொடுத்துவிட்டீர்களோ? உம்......! இப்பொழுது அவள் உங்களுடைய இதய ராணியாகிவிட்டாள் போலிருக்கிறது?'' விமலாவின் நாடி தளர்ந்துவிட்டது.

''இதய ராணியும் அல்ல, மனமோகினியும் இல்லை அவள். ஆனால் உயர்ந்த பண்பும், பரந்த உள்ளமும் கொண்டவள். நான் அவளைக் கேவலமாக நடத்தியுங்கூட அவள் என் மீது கொண்டிருந்த அன்பைக் கொஞ்சமும் மாற்றிக் கொள்ளாத உத்தமி.''

விமலா, படுக்கையிலிருந்து எழுந்து உட்கார்ந்தாள். அவளது கோபம் முற்றிலும் தணிந்துவிட்டது. ''கல்யாணியின் மனோபாவத்தைப் புரிந்துகொள்ளாமல் நீங்கள் பேசுகிறீர்கள். நீங்கள் செய்த துரோகத்தை அவள் மறந்து மன்னித்துவிட்டாள் என்று நினைக்காதீர்கள்! சந்தர்ப்பத்தைத்தான் அவள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறாள். எந்த நேரத்தில் என்ன செய்வாள் என்று யாராலும் சொல்லமுடியாது. அவள் மனதில் இருப்பதை மறைத்து வைத்திருக்கிறாள்.''

''மற்றவர்களால் அப்படி இருக்க முடியவில்லையே?'' குத்தலாகச் சொன்னான் நம்பிராஜன்.

''எந்த மற்றவர்கள்? என்னைத்தானே சொல்கிறீர்கள்?''

''அப்படித்தான் வைத்துக்கொள்ளேன்! உன்னால் மனத்தில் இருப்பதை மறைக்க முடிகிறதா? நினைப்பதை அப்படியே சொல்லி

விடுகிருய்; நீயும் முட்டாளாகிக் கொள்கிருய், என்னையும் முட்டாளாக்கி விடுகிருய்?''

''அவ்வளவுதாஞ, இன்னும் ஏதாவது சொல்லப் போகிறீர்களா?''

''நான் உண்மையைச் சொல்வதற்காக என் மீது நீ வருத்தப்பட்டுக்கொள்ளாதே, விமலா! உன்னிடம் தன்னடக்கம் இல்லை.''

''நீங்கள் ரொம்பவும் அடக்கம் உள்ள-வரோ? 'நாயே, முட்டாளே, பைத்தியமே' என்று என்னென்வெல்லாம் சொல்லி என்னைத் திட்டுகிறீர்கள்? கோபம் வந்துவிட்டால் என்ன தான் பேசவேண்டும் என்றே உங்களுக்குத் தெரியாமற் போய்விடுகிறது; என்னைக் குறை சொல்ல வந்துவிட்டீர்கள்?''

நம்பிராஜன் பதில் சொல்ல விரும்பவில்லை. ஒருமட்டும் விமலா சமாதானத்திற்கு வந்து விட்டாள் என்ற திருப்தியில் ஒரு பெருமூச்சு மாத்திரம் விட்டான் அவன்.

o o o

மறுநாள் காலையில் சுந்தராம்பாளின் அறையில் அமர்ந்திருந்தான் ஜெகதீசன். இருவரும் பல விஷயங்களைப் பற்றிப் பேசினர்.

''என்ன, ஜெகதீசன்! நீயும் இங்கு வந்து இருபத்தொன்று மணி நேரம் ஆகிவிட்டது. இங்கு நடைபெறும் கூத்துக்களையெல்லாம் பார்த்திருப்பாய் என்று நினைக்கிறேன்.''

ஜெகதீசன் தலையை ஆட்டிக்கொண்டு சிரித்தான் அசட்டுத்தனமாக.

''இப்படியெல்லாம் வரும் என்று நான் ஆரம்பத்திலேயே எதிர்பார்த்தேன். ஆனல் எப்படித் தடுப்பது? 'இங்கு வரக்கூடாது'

என்று யாரை நான் சொல்ல முடியும்? ' இப்பொழுது மூன்று பேர்களும் மூன்று திசையில் போய்க்கொண்டிருக்கின்றனர். என்ன செய்வது?'' ஜெகதீசனிடம் யோசனை கேட்பது போலப் பேசினுள் சுந்தராம்பாள்.

''வேடிக்கையாகத்தான் இருக்கிறது'' என்று பட்டும்படாமல் பதிலளித்தான் ஜெகதீசன்.

''நம்பிராஜனின் புத்தி ஏன்தான் இப்படிப் போயிற்ருே தெரியவில்லை. ரதி போன்ற மனைவியிருக்க, குரங்கைக் கட்டி அழுதானும் ஒருவன்! அப்படியிருக்கிறது நம்பிராஜன் கதை. கல்யாணி, உன் அத்தை மகள்தானே? நம்பிராஜன், அவளிடம் என்ன குறையைக் கண்டு அந்த விமலாவை சேர்த்துக்கொண்டான்? பாவம்! கல்யாணியின் முகத்தைப் பார்க்கவே என்னல் முடியவில்லை.''

''ரொம்பவும் மெலிந்துவிட்டாள்.''

''எவ்வளவு வசதிகளோடு இருந்தாலும், தன்னை வாழாவெட்டியாக்கிவிட்டுத் தன் புருஷன் இன்னொருத்தியோடு வாழ்கிருன் என்ருல் எந்தப் பெண்ணாலும் சகித்துக்கொண்டிருக்க முடியாது, தம்பி! அதனல் தான் கல்யாணி மெலிந்துவிட்டாள்.''

எதையோ நினைத்துப் பெருமூச்சு விட்டான் ஜெகதீசன்.

சுந்தராம்பாள், வயோதிகத்தினல் உடல் பலத்தை இழந்துவிட்டாலும்—நடப்பதற்கு சக்தியற்றவளாக யிருந்தாலும் பிறருடைய மன உணர்ச்சிகளைப் புரிந்துகொள்ள முடியாதவள் அல்ல. ஜெகதீசனுடைய பெருமூச்சின் அர்த்தத்தை அவள் புரிந்து கொண்டாள்.

''கல்யாணி உன்னை மணந்திருந்தால் எவ்வளவோ சந்தோஷமாக இருந்திருப்பாள். அதைக் கெடுத்தவள் நான்தான். நம்பிராஜனின் புத்தி இப்படி மழுங்கிப்போய்விடும் என்று நான் கண்டேனா?''—இவ்வாறு சொல்லிவிட்டு அவளும் பெருமூச்சு விடுத்தாள்.

ஜெகதீசன் தலை குனிந்தான். அவனது மனத் திரையில் கல்யாணி சலனமிட்டாள்.

o o o

## விருந்தும் - வேடிக்கையும்

புதிய விருந்தாளிகள் இருவர் ஆனந்த விலாஸிற்கு வந்திருந்தனர். அட்வகேட் அதிசயம் பிள்ளை ஒருவர்; மற்றவன் ஒரு வாலிபன்; பெயர், செல்வராஜ். விமலாவிற்குச் சித்தி மகனும் அவன். கிட்டத்தட்ட இருவருக்கும் சம வயதுயிருக்கும். 'செல்வராஜ்' என்று பெயர் சொல்லித்தான் அவனைக் கூப்பிட்டாள் விமலா.

அட்வகேட் அதிசயம் பிள்ளையும், செல்வராஜும் வெவ்வேறு ஹோட்டல்களில்தான் தங்கியிருந்தனர். சுந்தராம்பாளைப் பார்ப்பதற்காக அதிசயம் பிள்ளை ஆனந்த விலாஸிற்கு வந்தார். விமலாவைப் பார்த்துச் செல்வதற்கு செல்வராஜ் வந்திருந்தான். இருவரையும் தன் வீட்டில் விருந்து உண்ணும்படிக் கேட்டுக்கொண்டாள் சுந்தராம்பாள். எனவே, அன்று இரவில் ஆனந்தவிலாஸில் பெரிய விருந்து நடைபெற்றது.

விருந்தில் எத்தனையோ வேடிக்கைகள், விபரீதங்கள் எல்லாம் நிகழ்ந்தன. சுந்தராம்-

பாளின் சாப்பாடு, வழக்கம்போல அவனுடைய அறைக்கே போய்விட்டது.

நீலமேகம் பிள்ளை மறைந்துவிட்டார் என்றாலும் அவர் ஏற்படுத்திய பழக்கங்கள் மறையவில்லை. அதன்படி, நீளமான ஒரு மேஜையின் மீதுதான் உணவு பறிமாறப்பட்டது. மொத்தம் ஏழு இலைகள் போடப்பட்டிருந்தன. பதார்த்தங்களைப் படைத்துவிட்டு அனைவரையும் சாப்பாட்டிற்கு அழைத்தான் சமையல்காரன் சதாசிவம்.

அதிசயம் பிள்ளை எதையும் பற்றிச் சிந்திக்காமல், முதல் இலையில் உட்கார்ந்துவிட்டார். சித்ராவும் தயங்கவில்லை, அதிசயம்பிள்ளைக்கு இடது பக்கம் அமர்ந்தாள். ஜெகதிசன் தயங்கிக் கொண்டே அவள் பக்கத்தில் உட்கார்ந்தான். இன்னும் மூன்று இலைகள் எதிரிலும், மேஜையின் குறுக்கு வாட்டத்தில் தனியாக ஓர் இலையும் கிடந்தன.

கல்யாணியும் — விமலாவும் உட்கார்ந்த பின்னர், அதை அனுசரித்து இருவருக்கும் மனத்தாங்கல் ஏற்படாத வண்ணம், தான் உட்காரலாம் என்று நினைத்துக்கொண்டிருந்தான் நம்பிராஜன். கணவன் உட்கார்ந்த பின்பு உட்காரவேண்டும் என்று கல்யாணி நினைத்தாள். கணவனின் பக்கத்தில்தான் தான் உட்காரவேண்டும் என்று விமலா நின்றாள். எங்கே உட்காருவது என்று தெரியாமல் விழித்தான் செல்வராஜ்.

"ஏன் இப்படி நின்றுகொண்டிருக்கிறீர்கள்? உட்காருங்கள்!" தான் அந்தக் கூட்டத்தில் பெரியவர் என்ற முறையில் கூறினார் அதிசயம்பிள்ளை.

தங்கள் 'குட்டு' அம்பலமாகிவிடக்கூடாது என்ற நோக்கத்தில் நம்பிராஜன் விர்ரென்று சென்று, மேஜையின் குறுக்குவாட்டத்தில் கிடந்த தனி இலையில் உட்கார்ந்து கொண்டான். அடுத்த இலையில் கல்யாணி அமர்ந்ததும் விமலாவின் முகம் சுளித்தது, கண்கள் சிவந்தன. கோபத்தை அடக்கிக்கொண்டு கடைசி இலையில்-அதிசயம்பிள்ளைக்கு எதிரில் அமர்ந்து விட்டாள். விமலாவுக்கும் — கல்யாணிக்கும் மத்தியில் காலியாகக் கிடந்த இலையில் செல்வராஜ் உட்கார்ந்தான்.




இந்த நிகழ்ச்சிகளைக் கவனித்த ஒவ்வொரு-
வரது மனமும் வெவ்வேறு திசையில் வே
செய்ய ஆரம்பித்தது. ஜெகதீசனின் கல
கல்யாணியையும், சித்ராவையும் மாறி
பார்த்துக்கொண்
யும் புன்னகையுட
குனிந்த தலையை
தலையைத் தொங்க
தான்; ஆனால்
கல்யாணியைத் 'திருட
செல்வராஜ், விமலாவை
வதற்காக ஏதேதோ

செய்தான். ருசிகரமான சாப்பாட்டையும் விடாமல், அங்கு நடைபெற்ற நாடகங்களேயும் ரசித்துக் கொண்டு தனி மனிதனுக—அமைதியாக இருந்தார் அதிசயம் பிள்ளை.

சமையல்காரன் சதாசிவம், எல்லாம் தெரிந்தும் தெரியாதவன்போல—வந்த சிரிப்பையும் அடக்கிக்கொண்டு பதார்த்தங்களேப் பறிமாறி முடித்தான். கல்யாணியின் காலே நம்பிராஜன் மிதித்ததும், தெரியாமல் கைபட்டுவிட்டதுபோல ஜெகதிசன் முழங்கையால் இரண்டுமூன்று தடவைகள் சித்ராவை இடித்ததும், பதிலுக்குச் சித்ரா சிரித்ததும், செல்வராஜ் விமலாவையே பார்த்தவண்ணம் சாப்பிட்டுக்கொண்டிருந்ததும் சதாசிவத்திற்கு மாத்திரந்தான் தெரியும்.

எப்படியோ ரசாபாசம் இல்லாமல் விருந்து முடிந்தது.

o o o

# அட்வகேட் அதிசயம்

விடைபெற்றுச் செல்வதற்காகச் சுந்தராம்
ின் அறைக்கு வந்தார் அதிசயம் பிள்ளை.
ாடு ரொம்பப் பிரமாதம்! இவ்வளவு
... சாப்பிட்டு இங்கு நாட்கள்
வரட்டுமா?''

லாம்'' என்ருள்
வள் எழுந்து உட்

ரு நாற்காலியில் அமர்ந்

''நம்பிராஜன் உங்களிடம் ஏதாவது சொன்ஞை?'' மெதுவாக ஆரம்பித்தாள் சுந்தராம்பாள்.

''ஒன்றும் சொல்லவில்லையே? ஏன், என்ன சமாச்சாரம்?''

''தெரியாதவர்போலக் கேட்கிறீர்களே? அவனும் நீங்களும் ஒரே ஊரைச் சேர்ந்தவர்கள். அவன் செய்திருக்கும் காரியங்கள் எல்லாம் உங்களுக்குத் தெரியும். தன் புதிய மனைவியோடு இங்கு வந்திருக்கிருன். கல்யாணியும் இங்கே தான் இருக்கிருள். அவர்களுடைய போக்கு, நடவடிக்கைகள் எல்லாவற்றையும் நீங்கள் பார்க்கவில்லையா?''

''பார்த்தேன்! என்க்கு ஒன்றும் சொல்லத் தோன்றவில்லை.'' பிடி கொடுக்காமல் பேசிஞர் அட்வகேட்.

''எல்லாம் சித்ரா சொன்ஞள். இங்கு வரும்படி நம்பிராஜனுக்கு ஏன் கடிதம் எழுதி ஞேம் என்று இப்பொழுது வருதப்படுகிறேன். இங்கு வைத்து ஏதேனும் விபரீதம் நடந்துவிடக் கூடாதே என்று எனக்குப் பயமாயிருக்கிறது.''

''பயப்படுவானேன்? நம்பிராஜன், கல்யாணியிடம் பிரியமாக இருப்பதுபோலத் தானே தெரிகிறது?''

''அதஞல்தான் பயப்படவேண்டியிருக்கிறது! விமலாவுக்கு அவன்மீது ஆத்திரம் ஏற்படுமல்லவா? இங்கு வந்த நாளிலிருந்து அவள் வெறி பிடித்த நாய்போல நடந்துகொண்டிருக்கிருள். நேற்று ஒரு கதைப் புத்தகத்திற்காக இரண்டு பேரும் சண்டை பிடித்தார்களாம்.''

''உம்...! விமலாவைப்பற்றிக்கூட நான் அவ்வளவு கவலைப்படவில்லை. நம்பிராஜன் உண்மையில் கல்யாணியிடம் பிரியமாக இருக்

கிருனு அல்லது அப்படி நடிக்கிருனு? திடீரென்று இந்த மாறுதல் ஏற்படக் காரணம் என்ன? அவன் கல்யாணியின்மீது பிரியம் காட்டுவதன் நோக்கம் என்னவாயிருக்கும்? அதுதான் புரியவில்லை!''

சுந்தராம்பாள் சிந்தித்தாள். ''நீங்கள் சொல்வதும் வாஸ்தவந்தான். அதன் ரகசியம் இப்பொழுதுதான் எனக்கு விளங்குகிறது. என்னுடைய ஆயுளுக்குப் பின்னர் எங்கள் சொத்து முழுவதும் நம்பிராஜனுக்கும்—கல்யாணிக்கும் சேரவேண்டும் என்று உயில் எழுதி வைத்திருக்கிருர் அவர். அதனுல், கல்யாணியை மயக்கிச் சொத்து முழுவதையும் தான் அடைவதற்குச் சதி செய்கிருனே என்னவோ?''

''இருக்கும்! எதற்கும், ஏமாந்துவிடாமல் இருக்கும்படி கல்யாணியை எச்சரிக்கை செய்து விடுவது நல்லது. பாவம்! இருப்பதையும் கொடுத்துவிட்டு நடுத் தெருவில் நின்று திண்டாடாமல் பார்த்துக்கொள்ளுங்கள்.''

''இன்றே கல்யாணியிடம் சொல்லிவிடுகிறேன். உம்......உங்களை ஒன்று கேட்க வேண்டும் என்று நினைத்தேன். விமலாவின் தம்பி என்று சொல்லிக்கொண்டு ஒருவன் வந்திருக்கிருனே-யாரோ செல்வராஜ் என்பவன்-அவன் நிஜமாகவே அவளுக்குச் சித்தி மகன் தானு?''

''அதென்னவோ எனக்குத் தெரியாது. ஆனுல் அடிக்கடி திருநெல்வேலியில் அவனைப் பார்த்திருக்கிறேன்.''

''விமலாவும் அவனும் நடந்துகொள்ளும் முறை ஒரு தினுசாகயிருக்கிறதாம்! சித்ரா சொன்னுள்.''

''ஆம். சாப்பிடும்பொழுது நானும் கவனித்தேன். அக்காளும்—தம்பியும்போல அவர்கள் பழகவில்லை.''

''இந்த வயது காலத்தில் இத்தகைய அநியாயத்தையெல்லாம் என் காதால் கேட்க வேண்டியிருக்கிறதே!'' கண்களை மூடினாள் சுந்தராம்பாள்.

அதிசயம்பிள்ளை சற்று நேரம் மௌனமாக இருந்தார். பின்பு, ''நான் விடைபெற்றுக் கொள்கிறேன்'' என்று எழுந்தார்.

சுந்தராம்பாள், ''நீங்கள் இங்கேயிருக்கும் வரையில் அடிக்கடி இங்கு வந்து போங்கள்'' என்று சொல்லி விடை அளித்தாள்.

o o o

ஆனந்த விலாஸின் முன்பக்கத்தில், நறுமணம் வீசும் புஷ்பச் செடிகள் நிறைந்த தோட்டத்தில் வட்டமாகப் போடப்பட்டிருந்த நாற்காலிகளில் அனைவரும் அமர்ந்து சம்பாஷித்துக் கொண்டிருந்தனர். அவ்வழியாக வந்த அதிசயம்பிள்ளையை அழைத்தான் நம்பிராஜன்.

''நேரம் ஆகிவிட்டது, மிஸ்டர். நான் போக வேண்டும்'' என்று சொல்லிக் கொண்டே அவர்கள் பக்கத்தில் சென்றார் அட்வகேட்.

''பரவாயில்லை, ஸார்! நானும் ஹோட்டலுக்குப் போகவேண்டியவன் தான். இருவரும் சேர்ந்து ஒரு டாக்ஸியில் போய்விடலாம், உட்காருங்கள்'' என்றான் செல்வராஜ்.

''நீ எந்த ஹோட்டலில் தங்கியிருக்கிறாய்?'' கேட்டுக் கொண்டே ஒரு நாற்காலியில் அமர்ந்தார் அதிசயம் பிள்ளை.

''மயிலாப்பூரில் தான்; மகேஸ்வரி லாட்ஜில்.''

''அப்படியானால் சரி; நானும் பக்கத்து ஹோட்டலில்தான் 'ரூம்' எடுத்திருக்கிறேன்.''

''எங்கே சந்திர விலாஸிலா?''

''ஆம். சென்னைக்கு வந்தால் அங்கேதான் நான் தங்குவது வழக்கம். எனக்கு வேண்டிய சௌகரியங்களையெல்லாம் செய்து தருவார்கள். அந்த ஹோட்டல் முதலாளி ரொம்பத் தங்கமானவர்.''

''வக்கில் ஸார் பட்டணத்தில் எத்தனை நாள் முகாம்?'' நம்பிராஜன் ஹாஸ்யமாக வினவினான்.

''வந்த வேலை முடிந்ததும் கிளம்ப வேண்டியது தான். அநேகமாக நாளைக்கே முடிந்துவிடும் என்று நினைக்கிறேன்.''

''கேஸ் விஷயமாகத் தானே வந்திருக்கிறீர்கள்?''

''ஆம்! ஒரு கொலைக்கேஸ் சம்பந்தமாக 'அப்பீல்' செய்திருக்கிறேன். நாளை 'புல்பெஞ்ச்' நடைபெறுகிறது.''

''எந்த வழக்கு? எட்டையபுரம் பண்ணையார் கொலை வழக்குத்தானே?'' செல்வராஜ் கேட்டான்.

''ஆம்'' என்றார் அட்வகேட்.

''ஸார்! அமெரிக்காவில் ஓர் அதிசயமான கொலை வழக்கு நடந்திருக்கிறது, படித்திருக்கிறீர்களா?'' இது நம்பிராஜன்.

''எப்படி?'' ஜெகதீசன் தூண்டினான்.

''கதை இல்லையே?'' என்றாள் விமலா.

"உண்மையாக நடந்தது" என்று அழுத்தமாகச் சொல்லி அந்த வழக்கை விவரித்தான் நம்பிராஜன்.

"ஒரு பெரிய கோடீஸ்வரனை ஒருவன் கொலை செய்து விட்டான். ஆனால் அவன், தன் இச்சையாகச் செய்யவில்லை, அந்தக் கொலையின் மூலம் கிடைத்த லாபத்தை அவன் அடையவும் இல்லை. 'ஹிப்னாட்டிஸம்' என்பார்களே, அத்தகைய ஒருவித மனோசக்தியின் மூலம் அவனை மயக்கி, கொலை செய்யும்படி ஏவியவர் ஒரு பெரியடாக்டர் என்பது விசாரணையின் மூலம் தெரியவருகிறது. ஆனால் அதை நிரூபிப்பதற்கு ஆதாரங்கள் இல்லை. மேலும், கொலை நடந்த தினத்தன்று அந்த டாக்டர் வேறொரு ஊரில் இருந்தார் என்பதற்கு அத்தாட்சிகள் இருந்தன.

"இந்த நிலைமையில் யாரைக் குற்றவாளி என்று தீர்மானிப்பது? நீதிபதியும் திணறினார். ஜூரிகளுக்கும் ஒன்றும் புரியவில்லை. சட்டத்தின் படிக் கவனித்தால் கொலை செய்தவன் தான் குற்றவாளி ஆவான். ஆனால் அறிவுபூர்வமாக அவனை மயக்கி ஏவிய அந்த டாக்டர் தான் குற்றவாளி!" இவ்வாறு சொல்லி நிறுத்தினான் நம்பிராஜன்.

"கடைசியில் எப்படித் தீர்ப்புக் கொடுக்கப் பட்டது?" ஆர்வத்தோடு வினவினாள் விமலா.

"வக்கீல் ஸார்! நீங்கள் சொல்லுங்கள். இதில் நியாமாகத் தண்டனை அடையவேண்டியவன் யார்? சட்ட ரீதியாகப் பார்த்துச் சொல்லுங்கள்!" என்றான் நம்பிராஜன்

அதிசயம் பிள்ளை யோசனை செய்தார். ''சட்ட ரீதியாக இரண்டுபேர்களும் குற்றவாளி கள்தான்!''

நம்பிராஜன், ''அதெப்படி? அந்த டாக்டர் குற்றவாளி என்பதை எப்படி நிரூபிப்பீர்கள்? இரண்டாவது, கொலை செய்தவன் தன் சுய புத்தியோடு, எந்த விரோதத்தையோ அல்லது லாபத்தையோ கருதிச் செய்யவில்லை. ஆகவே, அவனைக் குற்றவாளி என்று சொல்ல முடியுமா?'' என்று உற்சாகத்தோடு பேசினான்.

வக்கில் குழம்பினார். பேச்சை மாற்று வதற்காக, ''ரொம்பத் தாகமாகயிருக்கிறது. கொஞ்சம் தண்ணீர் வேண்டும்'' என்றார்.

ஜெகதீசன், ''இதோ நான் கொண்டு வருகிறேன்'' என்று சொல்லிவிட்டு ஓடினான்.

புத்திசாலியான சித்ரா, அதிசயம் பிள்ளை யின் தர்மசங்கடமான நிலைமையை உணர்ந்து, ''ஸார்! நீங்கள் பெரியம்மாவிடம் போயிருந்தீர் களே, என்ன சொன்னார்கள்?'' என்று சம்பாஷணையைத் திருப்பினாள்.

''அதைக் கேட்க வேண்டுமா? எல்லாம் என்னைப்பற்றித் தான் பேசியிருப்பாள்'' என்றான் நம்பிராஜன்.

அதிசயம்பிள்ளை சங்கற்பத்தைக் கெட்டி யாகப் பிடித்துக்கொண்[illegible] ''அந்த அம்மாள் உன்னைப் பற்றித்தா[illegible] கவலைப்படுகிறார் கள். இந்த [illegible]தில் அவர்களோடு நீ சேர்ந்திரு[illegible]ன்ற வருத்தம் இருக்கும் [illegible]''

''நானா[illegible]கிறேன்?''

''பின்[illegible]வ[illegible]ா, 'வேண்டாம்' என்கிறார்கள்[illegible]க்கிறாள்.

''அவர்கள் 'வேண்டாம்' என்று சொல்லவுமில்லை; நீங்கள் 'மாட்டேன்' என்று சொல்லவுமில்லை! இருவருக்கும் மத்தியில் நான் ஒருவள் இருக்கிறேனே?'' சலிப்புடன் மொழிந்தாள் விமலா.

''என்ன, கல்யாணி! நீ பேசாமல் இருக்கிறாய்?'' அதிசயம் பிள்ளை சிரித்தவாறு கேட்டார்.

கல்யாணி புன்முறுவலுடன் பூமியை நோக்கினாள்.

ஜெகதீசன், தண்ணீர் கொண்டு வந்தான். அதை வாங்கிக் குடித்தார் அதிசயம் பிள்ளை. மணியைப் பார்த்தார், பத்து அடிப்பதற்கு பத்து நிமிஷம் பாக்கியிருந்தது. செல்வராஜைப் பார்த்து, ''நேரமாகி விட்டது, கிளம்புவோமா?'' என்றார்.

செல்வராஜ் இணங்கினான். தோட்டக்காரனை அனுப்பி ஒரு டாக்ஸி வரவழைத்து இருவரும் புறப்பட்டனர்.

''கொலைக் கதையைப் பாதியில் விட்டு விட்டீர்களே?'' நம்பிராஜனுக்கு ஞாபகப் படுத்தினாள் கல்யாணி.

''அதுவா? கொலை செய்தவனுக்கு ஆயுள் தண்டனை விதித்து, அவனுடைய மூளையைப் பரிசோதனை செய்து சிகிச்சை செய்வதற்காக பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்கு அனுப்பும்படி சிபாரிசு செய்தார் நீதிபதி. கொலை செய்வதற்குத் தூண்டிய டாக்டரை 'சந்தேகம்' என்ற பெயரால் கைது செய்து பாதுகாப்பில் வைத்து இருக்கிறார்கள். அதே சமயத்தில் 'ஹிப்னாடிஸம்' மூலமாக அவ்வாறு செய்வது சாத்தியமா,

என்பதை விஞ்ஞானிகள் ஆராய்ச்சி செய்கின்றனர்.''

o o o

ஸாந்தோமிலிருந்து மயிலாப்பூரை நோக்கி வந்து கொண்டிருந்தது ஒரு டாக்ஸி. உள்ளே அட்வகேட் அதிசம்பிள்ளையும் செல்வராஜும் அமர்ந்திருந்தனர். சந்திரவிலாஸைத் தாண்டித் தான் மஹேஸ்வரி லாட்ஜிற்குப் போக வேண்டும்; எனவே டாக்ஸி, சந்திரவிலாஸின் முன்னால் நின்றது. அதிசயம்பிள்ளை கீழே இறங்கினார்.

''என்ன ஸார், இப்பொழுதுதான் வருகிறீர்களா?'' பின்னாலிருந்து வந்தது இந்தக் குரல்.

திரும்பிப் பார்த்தார் அட்வகேட். ஜெகதீசன் அவர் பக்கத்தில் வந்தான்.

''என்னப்பா, அதற்குள் இங்கு எப்படி வந்தாய்?'' அதிசயம்பிள்ளை வினவினார்.

''உங்களுக்கு ஜலம் கொடுத்ததும் எனது நண்பன் ஒருவனைப் பார்பதற்காக வேகமாக வந்தேன். அவனைக் காணவில்லை, திரும்பி விட்டேன்'' என்றான் ஜெகதீசன்.

''இப்பொழுது எங்கே போகிறாய்? ஆனந்த விலாஸிற்குத்தானே?''

''ஆம்!''

''சரி, போய் வா'' என்று சொல்லிவிட்டு ஹோட்டலுக்குள் நுழைந்தார் அதிசயம் பிள்ளை.

செல்வராஜும் டாக்ஸியில் சென்று விட்டான். ஜெகதீசன், சிறிதுநேரம் ஹோட்டலையே பார்த்துக்கொண்டு நின்றுவிட்டு மெதுவாக நகர்ந்தான்.

அதிகாலை. சித்ரா நன்கு தூங்கிக்கொண்டு இருந்தாள். அவளை எழுப்பினான் சமையல்காரன் சதாசிவம். "அம்மா! பெரியம்மா உங்களை அவசரமாகக் கூப்பிடுகிறார்கள்" என்றான்.

சித்ரா, முகத்தைக்கூட அலம்பிக்கொள்ளாமல் சுந்தராம்பாளின் அறைக்குள் ஓடினாள். "என்னம்மா! என்னைக் கூப்பிட்டீர்களாமே?" பரபரப்புடன் வினவினாள்.

"அதிசயம் பிள்ளை இறந்துவிட்டாராம்! இப்பொழுதுதான் போன் வந்தது!" அதற்கு மேல் சுந்தராம்பாளால் பேசமுடியவில்லை.

"ஆ" வென்று வாயைப் பிளந்தாள் சித்ரா. "நிஜமாகவா? மாரடைபினால் இறந்துவிட்டாரா அல்லது......?"

"அப்படித்தான் இருக்கும் என்று நினைக்கிறேன். ஹோட்டல் முதலாளிதான் போன் செய்தார். எதற்கும் நீ சந்திர விலாஸிற்குப் போய்ப் பார்த்துவிட்டு வா."

"சரி, அம்மா!"

வேகமாக வெளியே வந்தாள் சித்ரா. நம்பிராஜன் வராந்தாவில் நின்றான். "அட்வகேட் அதிசயம் பிள்ளை மரணமாகிவிட்டாராம். நான் போய்ப் பார்க்கப் போகிறேன்" என்று சொல்லிவிட்டுக் கார்ஷெட்டிற்கு ஓடினாள்.

"சித்ரா! யார், யார் இறந்துவிட்டதாகச் சொன்னாய்?" கேட்டுக்கொண்டே அவளைப் பின்தொடர்ந்தான் ஜெகதீசன்.

"அட்வகேட் அதிசயம்பிள்ளை இறந்துவிட்டார்!"

"கொலையா?"

"அதென்னவோ? அங்கு போய்ப் பார்த்தால்தான் தெரியும்." இவ்வாறு சொல்லிக்கொண்டே காரை ஸ்டார்ட் செய்வதற்கு முயன்றாள் சித்ரா. பெட்ரோல் இல்லாததாலோ என்னவோ, கார் ஸ்டார்ட் ஆகவில்லை.

"நடந்தே போய்விடலாம், சித்ரா! நானும் உன்னோடு வருகிறேன்" என்றான் ஜெகதிசன்.

இருவரும் வேகமாக நடந்தனர். பதினைந்து நிமிஷங்களில் சந்திர விலாஸை அடைந்தனர். வாசலில் பெருங் கூட்டம் கூடியிருந்தது. சித்ரா நேரே உள்ளே சென்று ஹோட்டல் முதலாளியைப் பார்த்தாள். "அதிசயம்பிள்ளை எந்த அறையில் கிடக்கிறார்?" மூச்சுத் திணறக் கேட்டாள்.

"இந்தப் பெண் யார்?" ஹோட்டல் முதலாளியுடன் பேசிக்கொண்டிருந்த டாக்டர் ராமன் வினவினார்.

"ஆனந்த விலாஸில் இருப்பவள்."

"ஓஹோ! சுந்தராம்பாளின் காரியதரிசியா?"

"ஆம்!" என்றார் ஹோட்டல்காரர்.

"அதிசயம் பிள்ளை உங்களுடன்தானே நேற்று விருந்து சாப்பிட்டார்?" சித்ராவிடம் கேட்டார் ராமன்.

"ஆம்!"

"அளவுக்கு அதிகமாகச் சாப்பிட்டு விட்டாரோ?"

"இல்லை. நிதானமாகத்தான் உண்டார்!... ஏன்? சாப்பாட்டிற்கும் மரணத்திற்கும் என்ன சம்பந்தம்?"

''ஏற்கனவே ரத்தக் கொதிப்பு உள்ள வராகத் தெரிகிறது. அதனால், உணவில் மாறுதல் ஏற்பட்டிருந்தாலும் அல்லது களைப்பு ஏற்படும்படியாகக் கொஞ்சம் கடினமாக வேலை செய்தாலும் மரண அபாயம் ஏற்படுவது சாத்தியம். அதனால்தான் கேட்டேன்.''

''சரி, இப்பொழுது பிணத்தை என்ன செய்யப் போகிறீர்கள்?'' என்றாள் சித்ரா.

''அவருடைய வீட்டிற்குத் தந்தி கொடுத்து இருக்கிறோம். அவர்கள் வரும் வரையில் பிணத்தை இங்கே போட்டுக் கொண்டிருக்க முடியுமா? ஆஸ்பத்திரிக்கு அனுப்பி விடலாம் என்று நினைக்கிறேன்.'' இது ஹோட்டல்காரர்.

சித்ராவும், ஜெகதிசனும் மாடிக்குச் சென்று பிரேதத்தைப் பார்த்தனர். முந்திய நாள் இரவில் சந்தோஷமாக - உற்சாகமாக இருந்த அதிசயம் பிள்ளை, எட்டு மணி நேரத்தில் பிணமாகி விட்டாரே என்று நினைத்த பொழுது சித்ராவின் கண்களில் நீர் ததும்பிவிட்டது.

o o o

## விபரீத விளைவு

''உம்......! இன்னும் என்னென்ன விபரீதம் நடக்கப் போகிறதோ தெரியவில்லை!''

சந்திரவிலாஸ் ஹோட்டலிலிருந்து திரும்பி வரும்பொழுது இவ்வாறு சலிப்புடன் கூறினாள் சித்ரா.

''ஏன் அப்படிச் சொல்கிறாய், சித்ரா?'' ஜெகதீசன் கேட்டான்.

''நேற்றிரவு உயிரோடிருந்த மனிதன் இன்று காலையில் பிணமாகிவிட்டார்! இன்னும் என்ன தான் நடக்காது?''

ஜெகதீசன் தன் தவடையை நிமிண்டிக் கொண்டான். ''அப்படியானால் அதிசயம் பிள்ளையின் மரணத்தைப் பற்றி நீ சந்தேகிக்கிறாயா, சித்ரா?'' சாதுர்யமாகக் கேட்டான்.

''மாரடைப்பினால் மரணம் ஏற்பட்டிருக்கும் என்பதை என்னால் நம்பமுடியவில்லை. அதிசயம் பிள்ளையின் மரணத்தில் ஏதோ மர்மம் புதைந்திருக்கிறது. அதனால்தான் இன்னும் என்னென்ன விபரீதங்கள் நடக்குமோ என்று நான் பயப்படுகிறேன்!''

''எங்கே? ஆனந்தவிலாஸிலா, அல்லது...?''

''ஆம்! ஆனந்தவிலாஸில்தான்! இன்னும் இரண்டு தினங்கள் எப்படிக் கழியப்போகிறதோ என்று நான் பல்லைக் கடித்துக் கொண்டிருக்கிறேன்.''

''இரண்டு தினங்கள் கழிந்துவிட்டால் அப்புறம் ஒரு விபரீதமும் நடைபெறாதா?''

''நடைபெறாது!''

''காரணம்?''

''நாளைக் கழித்து கல்யாணி ஊருக்குப் போகிறாளாம்.''

''அதனால்?''

''விபரீதம் நடைபெறுவதற்கு வழி யில்லை.''

''ஏன்?''

''இப்பொழுது விமலாவுக்கும் - கல்யாணிக்கும்தானே போட்டி! எந்த நேரத்தில் இருவரும் குடுமியைப் பிடித்துக் கொள்வார்களோ என்று நினைக்கவேண்டியிருக்கிறதே! அப்படி நடந்து

விட்டால் நம்பிராஜன் நரகாசுரனுக மாறி விடுவான்.''

சித்ரா கூறியதன் உள் அர்த்தம் ஜெகதீச னுக்கு விளங்கவில்லே. சிறிது யோசனே செய் தான். ''நம்பிரராஜன் என்ன செய்வான் என்று நீ நினேக்கிருய்?''

''கல்யாணியின்மீது விமலா கை வைத்தால் இன்றிருக்கும் நிலேமையில் அவன் விமலாவைத் தொலேத்து விடுவான்!''

''நிஜமாகவா? விமலாவிடந்தானே அவ னுக்குப் பிரியம் அதிகம்?''

''அது முன்பு! இப்பொழுது கல்யாணி யிடம் அவன் உயிராகயிருக்கிருன்.''

''காரணம்?''

''அதுவும் ஒரு மர்மம் தான்!''

ஜெகதீசனேத் திரும்பிப் பார்த்தாள் சித்ரா. ஜெகதீசன் சிரித்தான். ''சித்ரா!''

''என்ன?''

''அந்த விமலாவை நம்பிராஜன் நிஜமாகவே மணம் செய்துகொண்டானு?''

''அது பெரிய கதை!''

''சுருக்கமாகச் சொல்லேன்.'' கெஞ்சும் குரலில் மொழிந்தான் ஜெகதீசன்.

''நம்பிராஜனுக்கு முருகேசன் என்று ஒரு நண்பன் இருந்தான். அவனுடைய மனேவி குழல் வாய்மொழி. அந்தக் குழல் வாய் மொழி தான் விமலாவாக மாறியிருக்கிருள்!''

''ஓஹோ! அதுவா விஷயம்? அதனுல்தான் இப்பொழுது மனேவியின் மீது பிரியம் ஏற்பட் டிருக்கிறது போலிருக்கிறது?''

''ஆனால் கல்யாணி, நம்பிராஜனை நம்ப வில்லை. ஏதோ கபட நாடகம் ஆடுகிறான் என்று அவள் நினைக்கிறாள்.''

''சரிதான்! அப்படியானால் நீ நினைக்கிறபடி ஏதேனும் விபரீதம் நடைபெறுவது சாத்தியந் தான்.''

''இன்னொரு அதிசயம் என்ன தெரியுமா? விமலாவும் நம்பிராஜன் மீதுள்ள நம்பிக்கையை இழந்துவிட்டாள்.''

''அது இயற்கை தானே?''

''நீங்கள் நினைக்கிறபடி அல்ல. நீலமேகம் பிள்ளை தனது சொத்தின் உரிமையை நம்பிராஜ னுக்கும் அவனுடைய மனைவிக்கும் சேரும்படி யாக எழுதிவைத்திருக்கிறார். அதாவது சட்ட ரீதியாக கல்யாணிக்குத்தான் அந்தச் சொத்தில் பங்கு கிடைக்கும். ஆனால், தனக்கும் கிடைக்கும் என்று விமலா நினைக்கும்படியாக நம்பிராஜன் அவளை ஏமாற்றியிருக்கிறான். அந்தக் குட்டு வெளிப்பட்டுவிட்டால் நிலைமை இன்னும் மோச மாகிவிடும்.''

ஆனந்தவிலாஸ் பங்களாவிற்குள் நுழைந் ததும் இருவரும் சம்பாஷணைக்கு முற்றுப் புள்ளி வைத்துவிட்டனர்.

o o o

அன்று மாலை ஐந்து மணி. மயிலாப்பூர்— சுகம்-விரும்பிகள் மந்தை மந்தையாக ஸாந்தோம் கடற்கரையை நோக்கிச் சென்று கொண்டிருந் தனர். கோடையின் உஷ்ணமும், ஜனத்திரளின் வெப்பமும் சேர்ந்து, குளிர்ச்சியான கடற் காற்றையுங்கூட அனல் காற்றாக மாற்றிக்கொண்

டிருந்தன. அதனால்தானோ என்னவோ, ஜன நடமாட்டம் இல்லாத ஓர் தனியிடத்தில் அமர்ந் திருந்தான் முருகேசன்.

சாதாரணமாகக் கடற்காற்றை அனுபவிக்கச் செல்பவர்கள், கடலின் கரைகாணா மேற் பரப் பின் கவர்ச்சியிலும், குதித்தெழுந்து ஓடிவரும் அலைகளின் அழகிலும்—ஓசையிலும் மனத்தைப் பறிகொடுத்து, அங்கிருக்கும் நேரம்வரையி லேனும் துன்பத்தை மறந்துவிடுவதுண்டு. கடலுக்குப் புறமுதுகு காட்டி யாரும் உட்காரு வதும் இல்லை. ஆனால் முருகேசன் அவ்வாறு தான் இருந்தான். அவனுடைய பார்வை, சற்று தூரத்தில்—கரையை ஒட்டினாற்போல் இருந்த ஆனந்தவிலாஸ் பங்களாவின் மீது நிலைகுத்தி நின்றது. அவனுடைய மனத்தின் கொந்தளிப்பு அலையுடன் போட்டியிட்டுக் கொண்டிருந்தது. பௌர்ணமிச் சந்திரன் இரவிற்குப் பகலொளி அளித்தாற்போல் எழுந்ததைக்கூட அவன் கவனிக்கவில்லை.

நேரம் ஆக ஆக கடற்கரையில் குழுமி யிருந்த மக்கள் கொஞ்சம் கொஞ்சமாகக் கலைந்து கொண்டிருந்தனர். குடும்பத் தொல்லைகள் இல்லாதவர்கள், கவலையற்றவர்கள் கடற்கரை மணலிலேயே படுத்திருந்தனர். சிலர் தூங்கியும் போய்விட்டனர். சந்திரனும் வானத்தின் உச்சிக்கு ஏறிக்கொண்டிருந்தான். இவ்வள விற்கும் மத்தியில் முருகேசன் ஆடாமல், அசை யாமல் அதே நிலையில்தான் இருந்தான். என்ன நினைத்தானோ எழுந்து ஆனந்தவிலாஸை நோக்கி நடந்தான்.

அதே சமயத்தில் ஆனந்தவிலாஸ் பங்களா விற்குள் ஒரு கூக்குரல் எழும்பிற்று. தூங்கிக்

கொண்டிருந்த கல்யாணி திடுக்கிட்டு எழுந்து ஓடிவந்தாள். சமையல் அறைப் பக்கத்தில் உடல் நடுநடுங்க நின்றுகொண்டிருந்த சித்ராவைப் பார்த்தாள்.

''என்ன! என்ன, சித்ரா?'' பரபரப்போடு வினவினுள் கல்யாணி.

சித்ரா வாய்திறந்து பதில் சொல்லவில்லை; கையால் ஓரிடத்தைச் சுட்டிக் காண்பித்தாள். அங்கே சமயல்காரன் சதாசிவம் பிணமாகக் கிடந்தான்! கல்யாணியும் பீதியடைந்தாள்.

''கல்யாணி! ஓடு! போய் பெரியம்மாளிடம் சொல்லிவிட்டு வா!'' குரல் நடுங்கக் கூறினுள் சித்ரா.

கல்யாணி, சுந்தராம்பாளின் அறைக்கு விரைந்தாள். சித்ராவும் அவளைப் பின் தொடர்ந்தாள். சித்ரா, சுந்தராம்பாளின் அறையில் காலடி வைப்பதற்கு முன்னதாகவே, ''ஐயோ! கொலே! கொலே!'' என்ற கல்யாணியின் கதறல் அவள் காதில் விழுந்தது. சித்ராவின் இதயம் வெடித்துவிடும்போலிருந்தது. நெஞ்சத்தை அழுத்திப் பிடித்துக்கொண்டு அறைக்குள் நுழைந்தாள். அந்தோ! சுந்தராம்பாள் ரத்தக் குளத்தில் மிதப்பதைக் கண்டாள் அவள்.

o o o

இன்ஸ்பெக்டர் பாண்டியனின் தலைமையில் ஒரு போலீஸ் படையினர் ஆனந்தவிலாஸை நோக்கிப் பறந்தனர். பாண்டியன் காரைவிட்டு இறங்கியதும் வராந்தாவில் நின்றிருந்த நம்பி ராஜன் கவலை தோய்ந்த முகத்துடன் அவர் முன்னல் சென்ருன். ஜெகதீசன், கல்யாணி,

விமலா, சித்ரா, தோட்டக்காரன் ஆகியோர் வராந்தாவிலேயே நின்றிருந்தனர்.

''மிஸ்டர் நம்பிராஜன்! நீங்கள் நேற்றிரவு வீட்டில் இல்லையா? சித்ராதான் எனக்கு போன் செய்தாள். நீங்கள் எங்கே போயிருந்தீர்கள்?''

''கடைசிக் காட்சி சினிமாவுக்குப் போயிருந்தேன், ஸார்! இரண்டு மணிக்குத் திரும்பி வந்தேன். அதற்குள் இவ்வளவு அலங்கோலம் நடந்துவிட்டிருக்கிறது.'' தளுதளுத்த குரலில் பேசினான் நம்பிராஜன்.

''சரி! முதலில் பிணம் கிடக்கும் இடத்தைப் பார்வையிடுவோம், வாருங்கள்!'' பிகுவுடன் பகர்ந்தார் பாண்டியன்.

நம்பிராஜன் நகர்ந்தான். பாண்டியன், ஒரு ஹெட்கான்ஸ்டேபிளை அழைத்து டாக்டர், விரல் ரேகை நிபுணர் முதலியோர்களுக்கு போன் செய்து வரவழைக்கும்படிச் சொல்லிவிட்டு, நம்பிராஜனின் பின்னால் சென்றார். வராந்தாவில் நின்றிருந்தவர்கள் அனைவரையும் ஒரு தினுசாகப் பார்த்துக்கொண்டார். சுந்தராம்பாளின் அறைக்குள் நுழைந்தார். பரிசீலனையைத் துவக்கினார்.

கட்டிலில்தான் கிடந்தாள் சுந்தராம்பாள். தலையில் பலமான அடிபட்டதால் ரத்தம் ஒழுகி உரைந்துபோயிருந்தது. வேறு எந்த விதமான காயமும் இல்லை.

''சுந்தராம்பாள் இறந்த பின்பு யாரேனும் பிணத்தைத் தொட்டார்களா?'' நம்பிராஜனிடம் கேட்டார் பாண்டியன்.

''இல்லை, ஸார்! அதன் பக்கத்திலேயே யாரும் நெருங்கவில்லை.''

''இறந்ததை முதலில் பார்த்தது யார்?''

“கல்யாணி! இரண்டாவது சித்ரா பார்த்தாளாம். பின்புதான் ஜெகதீசனும், தோட்டக்காரனும் வந்தார்களாம்.”

விசாரணையில் ஈடுபடுவதற்கு முன்னர் அந்த அறையைப் பரிசோதனை செய்துவிடுவது நல்லதென்று கேள்வியை நிறுத்திவிட்டார் பாண்டியன். அவரது கண்கள் அறை முழுவதும் துளாவின.

பிணத்தின் தலைப்பக்கம்—கட்டிலுக்கு அடியில் ஒரு டென்னிஸ் மட்டை கிடந்தது. அதையும் நம்பிராஜனையும் மாறி மாறிப் பார்த்தார் பாண்டியன். அந்தப் பார்வையின் கருத்தை உணர்ந்த நம்பிராஜன், “அந்த மட்டை என்னுடையதுதான்! இங்கே எப்படி வந்தது என்றுதான் எனக்குத் தெரியவில்லை” என்றான்.

பாண்டியன், வாய்க்குள் சிரித்துக்கொண்டார். டென்னிஸ் மட்டையின்மீது தன் விரல் ரேகை பதிந்து விடாமல் கைக் குட்டையை உபயோகித்து அதை எடுத்தார். மட்டையை அங்குமிங்கும் புரட்டிக் கவனித்தார். ரத்தக் கறை அதில் படிந்திருக்கிறதா என்பதை அறிவதற்குத்தான் அவ்வாறு நோக்கினார்; ஆனால் ரத்தக்கறை தென்படவில்லை.

சுமார் அரைமணி நேரம் வரையில் அறை முழுவதையும் சுற்றிப் பார்த்தார் இன்ஸ்பெக்டர் பாண்டியன். சுந்தராம்பாளின் துணிமணிகள், பக்தியூட்டும் சில பாடல் புத்தகங்கள் ஆகியவைகள் தவிர உபயோகமான துப்பு எதுவும் கிடைக்கவில்லை. டென்னிஸ் மட்டையை மாத்திரம் வைத்து நம்பிராஜன்தான் சுந்தராம்பாளைக் கொலை செய்திருக்கக் கூடும் என்று தீர்மானித்து விட முடியுமா? அவன் சினிமாவுக்குப் போயிருந்ததாகச் சொல்கிறானே?

பாண்டியன் சிந்தித்தவாறு, "சமையல்கார னின் சவம் எங்கே?" என்று நம்பிராஜனிடம் வினவினுர்.

அவரை சமையல் அறைக்கு அழைத்துச் சென்று காண்பித்தான் நம்பிராஜன். சதாசிவம் தூங்குவதுபோல் கிடந்தான். அடியோ, காயமோ சரீரத்தில் இல்லை. ஆனுல் அந்த அறையில் 'குளோரோபாம்' (மயக்க மருந்து) நாற்றம் 'கப்'பென்று வீசிற்று. எனவே சதாசிவம் மயக்கமுற்றிருக்கிருனே என்னவோ என்ற சந்தேகத்தில் அவன் சுவாசத்தைக் கவனித்தார் பாண்டியன். நாடித் துடிப்பும், சுவாசமும் அறவேயில்லை. கண்கள்மாத்திரம் சிறிது வெளியே பிதுங்கியிருந்தன. அதனுல் முதலில் மயக்க மருந்தை உபயோகித்து அவனை மயக்கிப் பின்பு, அவன் மூச்சைப் பிடித்துக்கொண்டிருக்க வேண்டும் என்று தீர்மானித்தார் இன்ஸ்பெக்டர்.

அவ்வமயம் டாக்டரும், விரல்ரேகை நிபுண ரும் அங்கு வந்து சேர்ந்தனர். சுந்தராம்பாளையும், சதாசிவத்தையும் பார்க்கும்படி டாக்டரிடமும், இரண்டு அறைகளிலும் உள்ள வஸ்துக்களில் பதிந்திருக்கும் ரேகைகளைப் படம் எடுக்கும்படி விரல்ரேகை நிபுணரிடமும் கூறிவிட்டு வராந்தா விற்கு வந்தார் இன்ஸ்பெக்டர் பாண்டியன். ஒரு நாற்காலியில் அமர்ந்தார். அங்கிருந்த கல்யாணி, ஜெகதீசன், விமலா, தோட்டக்காரன் முதலி யோர் மரியாதைக்காக எழுந்தனர்; அவர்களை உட்காரும்படிச் சொன்னுர் பாண்டியன். அவரது கண்கள் விமலாவைக் கூர்ந்து நோக்கின. லேசாகக் கனைத்துக்கொண்டார். அந்தக் கனைப்பு விசாரணைக்குப் பீடிகை.

° ° °

# பழுத்த பாண்டியன்

"மிஸ்டர் நம்பிராஜன்! முதலில் இங்கிருப்பவர்களை எனக்கு அறிமுகம் செய்து வையுங்கள்." அங்கிருந்த எல்லோரையுமே பாண்டியனுக்குத் தெரியும்; என்றாலும் நம்பிராஜன் அவர்கள் ஒவ்வொருவரையும் பற்றி எத்தகைய அபிப்பிராயம் வைத்திருக்கிறான் என்பதை அறிவதற்காகவே அவ்வாறு கேட்டார் அவர்.

நம்பிராஜன் ஆரம்பித்தான்: "இவன் பெயர் ஜெகதீசன். சொந்த ஊர் திருநெல்வேலி. கல்யாணிக்கு மாமன் மகன். இங்கு வந்து ஒரு வாரம் ஆகிறது.

"அவள் சித்ரா. எனது பெரியம்மாளுக்குத் தூர உறவினள். கடந்த ஒரு வருஷத்திற்கு மேலாக இங்குதான் வசித்து வருகிறாள். பெரியம்மாள் படுக்கையில் விழுந்த பின்னர் வீட்டு விவகாரங்கள் முழுவதையும் அவள்தான் கவனித்துவருகிறாள்."

"சித்ராவைத்தான் எனக்கு நன்றாகத் தெரியுமே. உம்......அப்புறம்?" பாண்டியன் இடை மறித்துப் பேசினார்.

நம்பிராஜன், கல்யாணியைக் காண்பித்தான். "அவள் என் முதல் மனைவி, கல்யாணி." இதற்குமேல் சொல்வதற்கு நம்பிராஜனுக்கு நா எழவில்லை. அதனால் விமலாவைக் காட்டி, "அவளும் என் மனைவிதான் பெயர் விமலா" என்று சொல்லி முடித்தான்.

பாண்டியனும் அதிகம் துளைக்கவில்லை. நேரடியாக விஷயத்தில் இறங்கிவிட்டார். ''சரி! நேற்று இரவு கடைசிக் காட்சிக்கு நீங்கள் சினிமாவுக்குப் போயிருந்தீர்கள், இல்லையா?''

''ஆம்!''

''தனிமையாகவா அல்லது......?''

''செல்வராஜனும் என்னோடு வந்திருந்தான்.''

''செல்வராஜன் யார்?''

''எனது மனைவி விமலாவின் சகோதரன். ஹோட்டலில் தங்கியிருக்கிறான்.''

''எந்தத் தியேட்டருக்குப் போனீர்கள்?''

''உட்லண்ட்ஸ் தியேட்டர்.''

''டாக்ஸியில் தானே?''

''இல்லை, பெரியம்மாளின் காரை எடுத்துச் சென்றேன்.''

''நீங்கள் எப்பொழுதுமே உங்கள் மனைவியைச் சினிமாவிற்கு அழைத்துச் செல்வதில்லையா?''

நம்பிராஜன் பதில் சொல்லத் தயங்கினான். விமலாவை அழைத்துச் சென்றால் கல்யாணி கோபித்துக்கொள்வாள். அதேபோலத்தான் விமலாவும். இருவரையும் அழைத்துச் செல்வது முறையல்ல—ஆகவே அவன் தனிமையாகச் சென்றான். இதை எப்படிப் பாண்டியனிடம் சொல்லமுடியும்? எனவே, ''அழைத்துப் போவதுண்டு........,ஆனால் நேற்று அழைத்துச் செல்லவில்லை'' என்று சொல்லிச் சமாளித்தான்.

''சரி, நீங்கள் போகும்பொழுது சுந்தராம்பாளிடம் சொல்லிவிட்டுத்தானே சென்றீர்கள்?''

''ஆம்!''

''அப்பொழுது மணி என்ன?''

''ஒன்பதேகால்.''

''தியேட்டரிலிருந்து வரும்பொழுது?''

''மணி இரண்டு.''

''அப்படியானால் சுந்தராம்பாளும், சதாசிவமும் 9-15க்கு மேல் 2-மணிக்குள் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள் என்று தெளிவாகிறது. இல்லையா?''

''ஆம்.''

ஜெகதீசன் பக்கம் திரும்பினார் பாண்டியன். ''மிஸ்டர் ஜெகதீசன்! நீ இங்கு வந்து சரியாக எத்தனை நாட்கள் ஆகின்றன?''

''இன்றுடன் எட்டு நாள்.''

''நீ இங்கு வந்ததன் உத்தேசம்?''

''வேலை தேடுவதற்காக வந்தேன். ஒரு வாரமாக வேலைக்காகத்தான் அலைந்தேன். நாளைய தினம் மவுண்ட்ரோடில் ஒரு கம்பெனியில் சேரப்போகிறேன்.''

''உம்......! நேற்று இரவு நீ வீட்டில்தான் இருந்தாயா?''

''ஆம்! 6 மணி ஆட்டத்திற்குச் சினிமாவிற்குப் போய்விட்டு வந்தேன், சாப்பிட்டேன், படுத்துத் தூங்கிவிட்டேன். அப்புறம் சித்ராவின் கூச்சலைக் கேட்டுத்தான் எழுந்தேன்.''

''நீ வரும்பொழுது மணி பத்து இருக்குமா?''

''அதிகமாகவே இருக்கும். 9-30க்கு ஆட்டம் முடிந்தது. லஸ் கார்னரிலிருந்து ஸாந்தோமுக்கு நடந்துதான் வந்தேன். சர்ச் பக்கம் நான் வந்தபொழுது மணி பத்து அடித்து

விட்டது. அங்கிருந்து வீட்டிற்கு வந்து சேரு வதற்குக் குறைந்த பட்சம் ஐந்து நிமிஷமாவது ஆகியிருக்கும்.''

''சரி! உனக்குச் சாப்பாடு போட்டது யார்?''

''சமையல்காரன் சதாசிவம்தான்! சித்ராவும் கூட இருந்தாள்.''

பாண்டியன் சித்ராவின் முகத்தைப் பார்த் தார். அவள் 'ஆம்' என்று சொல்வதுபோலத் தலையை அசைத்தாள்.

ஆகவே பத்து மணிக்குமேல் தான் கொலை நடந்திருக்கவேண்டும் என்று ஊகித்தார் பாண்டியன்.

''சித்ரா! நீ கடைசியாக எத்தனை மணிக்குச் சுந்தராம்பாளைப் பார்த்தாய்?''

''ஜெகதீசன் சாப்பபிட்டுவிட்டுப் படுப் பதற்குச் சென்றுவிட்டார். பெரியம்மாள் என்னை அழைத்தார்கள். 'நம்பிராஜன் சினிமாவுக்குப் போயிருக்கிறான்; அவன் திரும்பி வந்ததும் கதவைத் திறக்கவேண்டும்; கவனமாகப் படுத்துக்கொள்' என்று என்னிடம் சொன்னார் கள். நான், 'சரி' என்று சொல்லிவிட்டு வராந் தாவில் வந்து பதினோரு மணி வரையில் ஒரு புத்தகத்தைப் படித்துக் கொண்டிருந்தேன். தூக்கம் கண்களை மிரட்டியதால், சாய்வு நாற்காலியிலேயே படுத்துத் தூங்கிப்போய் விட்டேன்.''

''கதவு?''

''தாழ்பாள் போடவில்லை, சும்மா சார்த்தி யிருந்தேன்.''

''சதாசிவம் இறந்துவிட்டதை நீ தானே முதலில் பார்த்தாய்?''

''ஆம்!''

''நீ இடையில் எழுந்திருக்கக் காரணம்?''

''ஏதோ ஒருவிதமான சத்தம் கேட்டது; திடுக்கிட்டு விழித்தேன். சார்த்தியிருந்த கதவு திறந்துகிடப்பதைக் கண்டதும் என் குடல் கலங்கிப்போய் விட்டது.''

''உடனே கூச்சலிட்டாய், சுந்தராம்பாளைப் பார்த்து வரும்படிக் கல்யாணியை அனுப்பி விட்டு, நீயும் பின்னால் சென்றாய்; அப்படித் தானே?''

''ஆம்.''

''அப்பொழுது மணி என்னவென்று தெரியுமா?''

''நான் விளக்கைப் போட்டதும் கடிகாரத்தைப் பார்த்தேன், ஒருவேளை நம்பி ராஜன் சினிமாப் பார்த்துவிட்டுத் திரும்பி வந்திருப்பானோ என்ற எண்ணத்தில்தான். அப்பொழுது மணி 12-20 ஆகியிருந்தது.''

பாண்டியன் தனது டைரியில் 11-மணிக்கு மேல் 12-20க்குள் இரண்டு கொலைகளும் நடந்திருக்கின்றன' என்று குறித்துக்கொண்டார். அவர் மனத்தில் ஒரு சந்தேகம் தோன்றிற்று. சித்ராவைக் கூர்ந்து நோக்கினார். ''ஏன் சித்ரா! நீ வராந்தாவில் சாய்வு நாற்காலியில் படுத்திருந்தாய்; ஜெகதீசன் எங்கே படுத்திருந்தான்?'' என்று நளினமாகக் கேட்டார்.

ஏனோ அந்தக் கேள்வி சித்ராவின் உள்ளத்தை ஓர் உலுக்கு உலுக்கிவிட்டது. அவள் தலை குனிந்தவாறு, ''வீட்டிற்குள்ளே அவருடைய அறையில்தான் படுத்திருந்தார்'' என்றாள்.

"ஜெகதீசன் சாப்பிட்ட பின்பு நீங்கள் இருவரும் எதைப் பற்றியும் பேசவே யில்லையா?"

"பேசினோம். தான் பார்த்துவிட்டு வந்த சினிமாவைப் பற்றியும், அவருக்கு வேலை கிடைத்துவிட்டதைக் குறித்தும் அவர் என்னிடம் சொன்னார்."

"அப்பொழுது விமலாவும், கல்யாணியும் எங்கேயிருந்தார்கள்?"

"அவரவர்களுடைய அறையில்!"

"உத்தேசமாகச் சொல்கிறாயா அல்லது நீ கண்ணால் பார்த்தாயா?"

"நானே பார்த்தேன்." அழுத்தமாகச் சொன்னாள் சித்ரா.

"ஏன்?" படாரென்று வினவினார் பாண்டியன்.

சித்ராவின் உடல் நடுங்கிற்று. பாண்டியன் சிரிப்பை அடக்கிக்கொண்டார். "சும்மா சொல், சித்ரா! அந்த நேரத்தில் விமலாவையும், கல்யாணியையும் நீ ஏன் பார்த்தாய்?"

மௌனம் சாதித்தாள் சித்ரா. மற்றவர் களும் அவளைக் கூர்ந்து நோக்கினர். குன்றிப் போய்விட்டாள் அவள். ஏதாவது பதில் சொல்லாது போனால் நிலைமை மோசமாகிவிடும் என்பதற்காக, "தூங்கிவிட்டார்களா என்று பார்த்தேன்" என்றாள்.

பாண்டியனும் அதற்குமேல் சித்ராவை வற்புறுத்தவில்லை. விமலாவை மாத்திரம் தனிமை யாக ஓர் அறைக்கு அழைத்துச் சென்றார். இரு வரும் நாற்காலிகளில் அமர்ந்தனர்.

''விமலா! நீ யார், நம்பிராஜனுக்கும் உன்னக்கும் எவ்வாறு தொடர்பு ஏற்பட்டது என்ற விவரங்களெல்லாம் எனக்கு நன்ருகத் தெரியும். இப்பொழுது நான் வந்திருப்பது கொலை சம்பந்தப்பட்ட விஷயம் என்பது உனக்கு நன்கு தெரியும். ஆகவே, நான் கேட்கும் கேள்விகளுக்குச் சுற்றி வளைக்காமல் 'டக், டக்'கென்று பதில் சொல்லவேண்டும், தெரிந்ததா?'' சற்று மிடுக்காகவே பேசினுர் பாண்டியன்.

விமலாவிற்கு உள்ளுக்குள் பயந்தான் என்ருலும், ''சும்மா கேளுங்கள்'' என்பதுபோல பாண்டியனை ஏறிட்டு நோக்கினுள்.

''கல்யாணி உன்னிடம் பிரியமாக நடந்து கொள்கிருளா?''

''கிடையாது! நான் இன்னும் உயிருடன் இருக்கிறேனே என்று அவள் நினைத்துக்கொண்டிருக்கிருள்.''

''சரி, நம்பிராஜனிடம் எப்படி நடந்து கொள்கிருள்?''

''முன்போலவே தன்னிடம் பிரியமாக அவள் இருக்கிருள் என்று அவர் நினைத்துக் கொண்டிருக்கிருர்: ஆனுல் அவரைப் பழி வாங்குவதற்குச் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிருள் என்பது என் அபிப்பிராயம்.''

''நீ அவ்வாறு எண்ணுவதற்குக் காரணம்?''

''எந்த நேரம் பார்த்தாலும் அவள் யோசனை செய்துகொண்டேயிருக்கிருள். அவரிடம் பேசும்பொழுதுகூட அன்பாகயிருப்பதுபோல நடிக்கிருளே தவிர உண்மையில் அவள் உள்ளம் துடிப்பதை நான் பலதடவைகள் கவனித்திருக்கிறேன்.''

"அப்படியா? உம்......! அதாவது அவளைத் தவிக்க விட்டு விட்டு உன்னுடன் நம்பிராஜன் வாழ்வதைக் கண்டு அவள் ஆத்திரம் அடைந்திருக்கிறாள் என்றுதானே நீ சொல்கிறாய்?"

"ஆம்! சுந்தராம்பாளைக் கொன்றதுகூட அவளாகத்தான் இருக்கும் என்று எனக்குப் படுகிறது!" ஆவேசத்துடன் கூறினாள் விமலா.

"அதனால் அவளுக்கு என்ன லாபம்?"

"கொலைப் பழியை அவர் மீது சுமத்தி விடலாம் அல்லவா?"

பாண்டியனின் மூளையில் 'படா'ரென்று ஓர் ஒளி வீசிற்று. நம்பிராஜனுடைய டென்னிஸ் மட்டையை சுந்தராம்பாளின் அறையில் போட்டதுகூடக் கல்யாணிதானோ? வாஸ்வத்தில் நம்பிராஜன் கொலை செய்திருந்தால் அந்த மட்டையை அங்கு போட்டிருப்பானா? விமலா கூறுவதிலும் அர்த்தம் இருக்கத்தான் செய்கிறது. ஆனால்......?

சுந்தராம்பாளைக் கல்யாணி கொன்றிருக்கக் கூடும், அது சாத்தியம் என்று வைத்துக் கொண்டாலும், சமையல்காரன் சதாசிவத்தை அவள் கொல்லவேண்டிய அவசியம் என்ன? அவளால் அவனைக் கொன்றிருக்க முடியுமா?— இத்தகைய கேள்விகள் பாண்டியனின் மூளையைக் குழப்பின.

"விமலா! ஜெகதீசனிடம் கல்யாணி சுமுகமாகப் பழகுகிறாளா?" ஜெகதீசனைக் கொலைக்குக் கருவியாகக் கல்யாணி உபயோகித்திருக்கக்

கூடுமோ என்பதை அறிவதற்காக இக்கேள்வியைப் போட்டார் பாண்டியன்.

"ஓ! ஜெகதீசன், அவளுடைய மாமன் மகன்தானே? அவள்மீது எப்பொழுதும் அவனுக்கு ஒரு கண் உண்டு. தனக்கு உபயோகமில்லாத கணவனைக் கொலை வழக்கில் மாட்டித் தூக்கில் தொங்க விட்டு விட்டு ஜெகதீசனுடன் சந்தோஷமாக வாழலாம் என்று அவள் நினைத்திருப்பாள். சித்ராவும், கல்யாணியும் ஜெகதீசனைக் காதலிப்பதில் போட்டிதான் போடுகிறார்கள்." பல வருடங்கள் மேடையில் நடித்துப் பழகிய முதல்தரமான ஒரு நடிகையைப் போல குரலில் ஏற்றத் தாழ்வு கொடுத்து பாண்டியன் மனத்தில் பதியும்படி உரைத்தாள் விமலா.

"உம்......!" என்று சொல்லிவிட்டுச் சிறிது நேரம் சிந்தித்தார் பாண்டியன். கல்யாணியின் மீதுள்ள பொறுமையினால் விமலா இவ்வாறு பேசலாம் என்பதையும் அவர் ஆலோசனை செய்யாமல் இல்லை; என்றாலும் விமலாவின் பேச்சில் ஏதோ ஓர் உண்மை இருக்கிறது என்று அவருக்குத் தோன்றிற்று.

அத்துடன் விமலாவை அனுப்பிவிட்டுக் கல்யாணியையும், சித்ராவையும் அதே அறைக்குத் தனித் தனியாக அழைத்து வந்து விசாரித்தார். இருவரது பதில்களும் கிட்டத்தட்ட ஒரே மாதிரியாக இருந்தன. அவர்கள் யார் மீதும் சந்தேகப்படுவதாகச் சொல்லவில்லை. நீலமேகம் பிள்ளை நீதிபதியாகயிருந்த காலத்தில், தண்டனை பெற்ற குற்றவாளிகளில் யாரேனும் ஒருவன், சிறையிலிருந்து விடுதலையாகி வந்து, தனது வஞ்சத்தைத் தீர்த்துக் கொள்வதற்காக சுந்தரம்

பாலேக் கொன்றிருக்கக்கூடும் என்று கல்யாணி அபிப்ராயம் தெரிவித்தாள். சித்ரா, தனக்கு மணமாவதற்கு முன்பு ஜெகதீசனேக் காதலித்த தாகவும், அந்தக் காதல் இன்று வரையில் மாருமல் இருந்து வருகிறது என்றும் உண்மையை ஒப்புக் கொண்டாள். முந்தைய நாள் இரவில் பதினேரு மணிவரையில் புத்தகம் படித்துக்கொண்டிருந்ததாகத் தான் கூறியது பொய் என்றும், அவ்வளவு நேரம்வரையில் ஜெகதீசனிடம் பேசிக்கொண்டிருந்ததாகவும் கூறினுள். செல்வராஜனுக்கும் விமலாவுக்கும் ரகசியத் தொடர்பு இருக்கும், உண்மையில் அவன் அவளுடைய சகோதரனுக இருக்க முடியாது என்று தான் கருதுவதாகவும் தெரிவித் தாள் சித்ரா.

அதற்குள் டாக்டர், விரல்ரேகை நிபுணர் ஆகிய இருவரது வேலேகளும் முடிந்துவிட்ட தால் இரண்டு பிணங்களேயும் ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவிட்டு, டாக்டருடனும் விரல்ரேகை நிபுணருடனும் சிறிது நேரம் பேசினுர் பாண்டியன். நம்பிராஜன், ஜெகதீசன், விமலா, கல்யாணி, சித்ரா, தோட்டக்காரன் ஆகியவர் களின் கை ரேகைகளேயும் பதிவு செய்து கொள்ளும்படி விரல்ரேகை நிபுணரிடம் சொன்னுர். பதிவு செய்யப்பட்டதும், அவை களேப் பரிசீலனே செய்து அன்று மாலேயிலேயே முடிவைத் தனக்குத் தெரிவிக்கும்படிக் கூறி விட்டு டாக்டரிடமும் விடைபெற்றுத் தனது காரியாலயத்திற்குச் சென்றுர் இன்ஸ்பெக்டர் பாண்டியன்.

சுந்தராம்பாள் இறந்த பின்புதான் சதாசிவம் இறந்திருக்கவேண்டும் என்பது டாக்டரின்

பரிசிலனையின்மூலம் தெளிவாயிற்று. தான் ஏற்கனவே ஊகித்தபடி, சுந்தராம்பாளைக் கொலை செய்த நபர் சதாசிவத்தின் கண்ணில் பட்டிருக்கவேண்டும்; அதனுல்தான் அவனும் கொலை செய்யப்பட்டு இருக்கிருன் என்று பாண்டியன் ஊர்ஜிதம் செய்துகொண்டார்.

கல்யாணியின் மீது விமலா குற்றம் சாட்டியதைப்போல செல்வராஜனை அடை வதற்காக விமலாவே சுந்தராம்பாளைக் கொலை செய்துவிட்டு அந்தப் பழி நம்பிராஜனின்மீது விழும்படி ஏன் செய்திருக்கக் கூடாது? அதுவும் சாத்தியந்தானே? இவ்வாறு தன்னைத்தானே கேட்டுக்கொண்டார் பாண்டியன்.

மொத்தத்தில் நம்பிராஜன், ஜெகதீசன், செல்வராஜன், கல்யாணி, விமலா ஆகிய ஐந்து பேர்களின் மீதும் சந்தேகப்படுவதற்கு இடம் இருக்கிறது. பாண்டியன், சித்ராவைக் கொஞ்ச மும் சந்தேகிக்கவில்லை. இவர்கள் தவிர கல்யாணி கூறியதுபோல மாஜிக் கைதி யாரே னும் செய்திருக்கலாம்.

ஆனுல் உண்மையான கொலையாளியை எப்படிக் கண்டுபிடிப்பது, கோர்ட்டில் எப்படி நிரூபிப்பது? இதே சிந்தனையில் மூழ்கிப்போய் விட்டார் பாண்டியன்.

o o o

## புதைந்த மர்மம்

அன்று மாலையில் விரல்ரேகை நிபுணரின் 'ரிப்போர்ட்' பாண்டியன் கைக்குக் கிடைத்தது.

சுந்தராம்பாளின் அறையில் கிடந்த டென்னிஸ் மட்டையில் நம்பிராஜனின் கை ரேகைதான் பதிந்திருந்தது. அங்கிருந்த பால் தம்ளரில் சதாசிவத்தின் ரேகை இருந்தது. பகவத்கீதை புத்தகத்தின்மீது கல்யாணியின் ரேகை. சந்தராம்பாள் படுத்திருந்த கட்டிலின் சாய்வுப் பலகையினுடைய மேல் விளிம்பில் சித்ராவின் ரேகை. ஜெகதீசன், செல்வராஜ், விமலா இம்மூவரது ரேகைகளும் எதிலும் தென்படவில்லை. —விரல்ரேகை நிபுணரின் ரிப்போர்ட்டில் கண்டிருந்த விஷயம் இவ்வளவு தான்.

இந்த ரிப்போர்ட்டினுல் பாண்டியனின் குழம்பிய நிலை சிறிதும் தெளிவுபெற வில்லை, குழப்பம் இன்னும் அதிகரித்தது என்றே சொல்லலாம். சிந்தித்துச் சிந்தித்துத் தலைக்கனம் கூட அவருக்கு ஏற்பட்டு விட்டது. இரவு பத்து மணிக்குமேல் அவருக்கு ஒரு யோசனை தோன் றிற்று. எந்தத் தொழிலையும் அந்தந்தத் துறை யில் அனுபவமுள்ளவர்களால்தான் சுலபமாகச் செய்து முடிக்க முடியும் என்ற ஓர் பெரிய உண்மையை உணர்ந்து, துப்பறியும் நிபுணர் துளசிங்கத்திற்கு போன் செய்தார். அதிர்ஷ்ட வசமாக அவர் வீட்டில் இருந்ததால் உடனே சம்பாஷணையைத் துவக்கினர். பாண்டியன்.

"ஹலோ! மிஸ்டர் துளசிங்கம்தானே?"

"ஆம்! நீங்கள்?"

"இன்ஸ்பெக்டர் பாண்டியன்பேசுகிறேன்"

"ஓஹோ! நீங்களா? என்ன விஷயம் ஸார்?"

''ஸ்ரீநகரில் இரண்டு கொலைகள் நடந்திருக்கின்றன. அது சம்பந்தமாக உங்களிடம் கலந்து பேசவேண்டியிருக்கிறது. இப்பொழுது வரட்டுமா?''

''ஓ! தாராளமாக வாருங்கள்!''

மிகவும் மகிழ்ச்சியோடு துளசிங்கத்தின் வீட்டிற்குச் சென்றார் பாண்டியன். தான் அறிந்த விவரங்கள் முழுவதையும் துளசிங்கத்திடம் கூறினார் அவர். தனக்கு வழி காண்பிக்கும்படியும் வேண்டிக் கொண்டார்.

துளசிங்கம் சிறிது நேரம் சிந்தனை செய்தார். ''செல்வராஜனைக் கண்டு பேசினீர்களா?''...... நிதானமாகக் கேட்டார் துளசிங்கம்.

''இல்லை. அவன் தங்கியிருக்கும் மஹேஸ்வரி லாட்ஜிற்கு இரண்டுதடவைகள் ஹெட்கான்ஸ்டேபிளை அனுப்பினேன்; அவன் அறையில் இல்லையாம்.''

''இன்று ஆனந்தவிலாஸிற்கு அவன் வந்தானா என்று விசாரித்தீர்களா?''

''இல்லை. அவன்மீது சந்தேகப்படுவதற்கு ஆதாரம் எதுவும் இல்லையே என்றுதான் பேசாமல் இருந்துவிட்டேன்.''

''சரி, பரவாயில்லை. வாருங்கள் இப்பொழுதே ஆனந்தவிலாஸிற்குப் போவோம்'' என்றார் துளசிங்கம்.

பாண்டியனின் காரிலேயே இருவரும் ஆனந்தவிலாஸை அடைந்தனர். அங்கு விசா

ரித்ததில், 'செல்வராஜன் வந்தான், சுந்தராம்பாளின் மரணச் செய்தியைக் கேட்டு மிகவும் வருந்தினான்' என்று தெரிந்தது.

தன்னிடம் பாண்டியன் கூறியவைகள் யாவற்றையும் ஒருமுறை நினைவுபடுத்திக் கொண்டார் துளசிங்கம். கல்யாணியை மாத்திரம் தனியாக அழைத்துச் சென்று சில நிமிஷங்கள் அவளுடன் பேசினார். பின்பு பாண்டியனுடன் திரும்பிவிட்டார்.

"கல்யாணியிடம் என்ன பேசினீர்கள், ஸார்?" காரில் அமர்ந்ததும் துளசிங்கத்திடம் வினவினார் பாண்டியன்.

"நாளைக் காலையில் ஆறுமணிக்குள் ஆனந்த விலாஸிற்குச் சென்று கல்யாணியைக் கைது செய்யுங்கள்!" கம்பீரமாகச் சொன்னார் துளசிங்கம்.

ஆச்சரியமடைந்த பாண்டியன், "ஆ! அவளா கொலை செய்தவள்? எப்படித் தீர்மானித்தீர்கள்?" என்றார்.

"முதலில் அவளைக் கைது செய்துகொண்டு வாருங்கள்! அப்புறம் மேல் நடவடிக்கைகளைப் பற்றிச் சொல்கிறேன்." விட்டுக் கொடுக்காமல் பேசினார் துளசிங்கம்.

துளசிங்கத்தை அவருடைய வீட்டில் இறக்கிவிட்டு, பாண்டியன் சிந்தித்துக்கொண்டே தனது ஜாகைக்குச் சென்றார்.

o o o

இரவு பன்னிரண்டுமணியிருக்கும். சைக்கிளில் மிகவும் வேகமாக வந்த ஒரு கான்ஸ்டேபிள் இன்ஸ்பெக்டர் பாண்டியனின் அறைக் கதவைத் தட்டினான். அவனுக்கு மேல் மூச்சு வாங்கிக் கொண்டிருந்தது.

கதவைத் திறந்தார் பாண்டியன். "என்னப்பா? என்ன சமாச்சாரம்?"

"ஸார்! ஸாந்தோம் கடற்கரையில் ஒரு பெண் தற்கொலை செய்வதற்கு முயன்றாளாம். அவளைக் காப்பாற்றி நம் ஸ்டேஷனுக்கு அழைத்து வந்திருக்கிறான் ஒருவன்."

பாண்டியன் பரபரப்புடன் உடையை மாற்றிக்கொண்டு ஸ்டேஷனுக்குச் சென்றார். அங்கே தலை குனிந்து நின்ற பெண்ணை உற்று நோக்கினார். அவள் கல்யாணிதான்! அவளது அருகில் நின்றவன் முருகேசன்!

"என்ன நடந்ததப்பா? நீ யார், அதை முதலில் சொல்!" முருகேசனைப் பார்த்துக் கேட்டார் பாண்டியுன்.

"என்னைத் தெரியவில்லையா, ஸார்? திருநெல்வேலியில் தற்கொலை செய்துகொள்வதற்கு முயன்றதாக என்மீது நீங்கள்தானே வழக்குத் தொடுத்தீர்கள், ஞாபகமில்லையா?"

"முருகேசனா?" வியப்புடன் வினவினார் பாண்டியன்.

"ஆம்! அன்று என்னைச் சிலர் காப்பாற்றினார்கள். இன்று நான் இவள் உயிரைக் காப்பாற்றி

னேன்'' என்று சொல்லிக் கல்யாணியை.
காண்பித்தான் முருகேசன்.

''விவரமாகச் சொல்!''

''நான் கடந்த சில தினங்களாக தினசரி இரவில் ஆனந்தவிலாஸிற்குப் பின் பக்கம் கடற் கரையில் படுத்து வந்தேன். தயவு செய்து 'ஏன்' என்றுமாத்திரம் கேட்காதீர்கள்? நேற்று அங்கே ஓர் அதிசயத்தைக் கண்டேன். இன்றும் ஏதாவது நடக்கலாம் என்பதற்காக ஆனந்த விலாஸையே பார்த்துக்கொண்டு உட்கார்ந் திருந்தேன். இந்தப் பெண் தன்னந்தனியாக சமுத்திரத்தை நோக்கி வந்ததைப் பார்த்தேன். அவளை மடக்கி, 'எங்கே போகிறாய்' என்று கேட்டேன். தற்கொலை செய்துகொள்ளப் போவதாகச் சொன்னாள். காரணம் கேட்டேன். அவள்மீது கொலைக் குற்றம் சாட்டப்பட்டிருக்கிற தாம். அந்தத் தண்டனைக்கு ஆளாகி, அவமான மடைந்து தூக்கில் தொங்குவதைவிட தற்கொலை செய்துகொள்வதுமேல் என்ற எண்ணத்துடன் வந்ததாகத் தெரிவித்தாள். அவளுக்கு
சொல்லி இங்கு அழைத்து வந்

பாண்டியன் கல்யா
''என்ன, உண்மையில்
யும், சாதாசிவத்தையும்

''ஆம்!'' தலை கு
கல்யாணி.

முருகேசன் கு
பொய் சொல்கிறாள்;
செய்த நபர் யாரே

ற்றிரவு அந்த அதிசயத்ததைத்தான் நான் பார்த்துக் கொண்டிருந்தேன்'' என்றான்.

இன்ஸ்பெக்டர் பாண்டியனுக்குத் தனது மகள் சரோஜா, பள்ளிக்கூடத்தில் தான் திருடியதாக ஒப்புக்கொண்ட நினைவு அந்த நேரத்தில் வந்தது. கல்யாணியும் அப்படித்தானா? பின்னே, துளசிங்கம் எதற்காகக் கல்யாணியைக் கைது செய்யும்படிக் கூறினார்? தகுந்த காரணமில்லாமல் அவர் அவ்வாறு சொல்லியிருக்கமாட்டாரே? குற்றவாளியைத் தானே நேரில் பார்த்ததாக முருகேசன் சொல்கிறான்? என்ன, எல்லாம் ஒரே மர்மமாக இருக்கிறது?

''மிஸ்டர் முருகேசன்! சுந்தராம்பாளைக் கொலை செய்த நபர் யார்?''

''ஸார்! நான் இன்னும் நான்கு தினங்களில் அந்தமானுக்குப் போகப் போகிறேன். அந்தக் காலத்தில் கொலைக் குற்றம் செய்தவர்களுக்கு தீவாந்திர சிக்ஷை விதித்து அந்தமான் தீவுக்கு அனுப்புவார்கள் என்பது உங்களுக்கும் தெரிந். ... ஆகவே நானும் ஒரு கொலையைச் ... அந்தமான் தீவுக்குப் போய்விட ... தேசத்தோடுதான் இங்கு வந் ... து அதற்கு அவசியமே ... டது. இந்த வழக்கில் ... சியாக உபயோகிப்பதாக ... ரயாணம் தடைப்பட்டு ... ற்றவாளியின் பெயரைச் ... ங்குகிறேன்.'' பணி... ான்.

... திற்கு இழுக்கவில்லை ... ரித்தார் பாண்டியன்.

முருகேசன், தான் நேரில் கண்ட விவரங்களைப் பாண்டியனிடம் கூறிவிட்டு விடை பெற்ருன். கல்யாணியை அன்றிரவு 'லாக்-அப்'பில் வைத்து விட்டு மறுநாள் பொழுது விடிவதற்கு முன்ன தாகவே துளசிங்கத்தைச் சந்தித்தார் இன்ஸ்பெக்டர்.

முருகேசன் கூறிய விவரங்களைப் பாண்டியன் துளசிங்கத்திடம் கூறவில்லை. கல்யாணி லாக்-அப்பில் இருப்பதையும் தெரிவிக்கவில்லை. துளசிங்கத்திடமிருந்து உண்மையை அறிய வேண்டும் என்ற உத்தேசத்தில், "ஸார்! கல்யாணி தற்கொலை செய்து கொண்டு விட்டாளாம்" என்று ஒரு வெடிகுண்டை வீசினர்.

"ஆ! நிஜமாகவா? பாவம்! அவளிடமிருந்து உண்மையைக் கிரகிக்கவேண்டும் என்பதற்காக 'நீதான் சுந்தராம்பாளைக் கொலை செய்தாய்; உன்னைக் கைது செய்யப்போகிறேம்' என்று பயமுறுத்துவதற்காக அவளிடம் சும்மா சொல்லி வைத்தேன். அதுவுங்கூட அவளுடைய நன்மையை உத்தேசித்துத்தான் அவ்வாறு கூறினேன். விஷயம் விபரீதமாகிவிட்டது." வருத்தத்துடன் கூறினர் துளசிங்கம்.

"நீங்கள் சொல்வது எனக்கு விளங்கவில்லை. 'கல்யாணியினுடைய நன்மை' என்றீர்களே அது என்ன?" பாண்டியன் துளைத்தார்.

"சுந்தராம்பாளின் ஆயுளுக்குப் பின்னர் நீலமேகம் பிள்ளையின் சொத்து முழுவதும் நம்பிராஜனுக்கும்—கல்யாணிக்கும்தான் சேரும். ஆனல் நம்பிராஜன், கல்யாணியின் பங்கையும்

தானே அடையவேண்டும் என்ற நோக்கத்தோடுதான் அவளிடம் பிரியமாக இருப்பது போலப் பாசாங்கு செய்தான். ஆனால் கல்யாணி ஏமாந்துவிட வில்லை. ஏமாறாமல் இருக்கும்படி சுந்தராம்பாளும் எச்சரிக்கை செய்திருக்கிறாள்.

"நம்பிராஜன் ஒரே கல்லில் இரண்டு பட்சிகளையும் வீழ்த்திவிட வேண்டும் என்று திட்டமிட்டுச் சுந்தராம்பாளைக் கொன்று, அந்தப் பழியைக் கல்யாணியின்மீது சுமத்துவதற்கு முயன்றிருக்கிறான். உங்களுடைய விசாரணையில் அவனை குற்றவாளி என்று நீங்கள் சந்தேகிக்கிறீர்கள் என்று தெரிந்திருந்தால் இதற்குள் அவன் கல்யாணியையும் தீர்த்துக் கட்டியிருப்பான். அவ்வாறு நேர்ந்துவிடக் கூடாது என்பதற்காகத் தான் கல்யாணியின் உயிரைக் காப்பாற்ற வேண்டும் என்ற நோக்கத்தில் 'நீதான் கொலைகாரி' என்று அவளிடமும், அவளைக்கைது செய்யும்படி உங்களிடமும் நான் கூறினேன். பாவம்! கொலைக் குற்றத்திற்கோ அல்லது கொலைக்கோ ஆளாகியிருக்க வேண்டிய அவள் தற்கொலை செய்துகொண்டு விட்டாள்! போக வேண்டிய உயிர் எப்படியோ போய்விட்டது, அவ்வளவுதான் சொல்லமுடியும். உம்......சரி, நீங்கள் உடனே சென்று நம்பிராஜனைக் கைது செய்யுங்கள். அவன்தான் சுந்தராம்பாளையும், சதாசிவத்தையும் கொலை செய்தவன்." பாண்டியனை துரிதப்படுத்தினார் துளசிங்கம்.

பாண்டியனிடம் முருகேசன் கூறிய குற்றவாளியும் நம்பிராஜன்தான். எனவே துளசிங்கத்தின் துப்பறியும் திறமையைக் கண்டு அகமகிழ்ந்தார் பாண்டியன். அவரிடம் மன்னிப்புக்கோரும்

முறையில், ''மிஸ்டர் துளசிங்கம்! கல்யாணி இறந்துவிடவில்லை; 'லாக்-அப்'பில் சௌகரிய மாக இருக்கிருள். உங்களுடைய அபிப்பிராயத்தைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்றுதான் அவ்வாறு பொய் சொன்னேன். என்னை மன்னிக்கவேண்டும். உங்களுடைய துப்பறியும் திறமையை இன்றுதான் என்னல் அளவிட முடிந்தது. நம்பிராஜனைக் கைது செய்வதற்குப் போலீஸ் படையை அனுப்பிவிட்டுத் தான் உங்களிடம் ஓடிவந்தேன்'' என்று சொல்லி, முருகேசன் தெரிவித்த விஷயங்களையும் அவரிடம் கூறினர்.

பாண்டியன் பொய் சொன்னதற்காகத் துளசிங்கம் வருந்தவுமில்லை, அவர்மீது கோபப் படவுமில்லை. ''நம்பிராஜன் சினிமாவுக்குச் சென்றிருந்ததாகக் கூறியதுதானே உங்களை மிகவும் குழப்பிவிட்டது? சினிமாப் பார்ப்பவர்கள் காட்சியின் மத்தியில் எழுந்து வெளியே வர முடியும் என்பது உங்கள் ஆராய்ச்சியில் படாமற் போய்விட்டது, இல்லையா?''

''ஆம்!'' சிரித்துக்கொண்டே பதிலளித்தார் பாண்டியன்.

''மிஸ்டர் பாண்டியன்! எப்பொழுதுமே ஒரு கொலை வழக்கில், கொலைகாரனைத் தீர்மானிப்பதற்கு முன்னல் கொலையின் உத்தேசம் எதுவாகயிருக்கும் என்று தீர்மானித்துக்கொண்டு நடவடிக்கையில் இறங்கிஞல் குற்றவாளி சுலபமாகப் பிடிபட்டுவிடுவான், தெரிந்ததா? இந்த வழக்கில் நம்பிராஜன் குற்றவாளி என்று நிரூபிப்பதற்கு உங்களிடம் போதிய சாட்சியங்கள்

இல்லை. முருகேசனையும் நீங்கள் சாட்சியாக உபயோகிக்க முடியாத நிலையில் இருக்கிறீர்கள். அனேகமாக நம்பிராஜனே குற்றத்தை ஒப்புக் கொண்டுவிடுவான் என்று நினைக்கிறேன். ஒரு வேளை அவன் ஒப்புக்கொள்ளாது போனால், நீங்கள் அவனை ஒப்புக்கொள்ளும்படிச் செய்ய வேண்டும். திட்டமிட்டுக் கொலை செய்பவர்கள் தோல்வியடைந்துவிட்டால், குற்றத்தைச் சுலப மாக ஒப்புக்கொண்டுவிடுவார்கள். இது எனது அனுபவம். போய்வாருங்கள்.''

• • •

பாண்டியனிடம் துளசிங்கம் தெரிவித்த படியே குற்றத்தை ஒப்புக்கொண்டு வாக்குமூலம் கொடுத்துவிட்டான் நம்பிராஜன்.

நாட்கள் பல உருண்டோடின.

விமலா, செல்வராஜனைப் பிடித்துக் கொண்டுவிட்டாள். இன்னும் சில தினங்களில் விதவையாகப் போகும் கல்யாணி, விதவையான சித்ராவுக்கும்—ஜெகதீசனுக்கும் மணமுடித்து ஆனந்தவிலாஸிலேயே அவர்களுக்கு ஆதிக்க மும் கொடுத்தாள்.

கோர்ட் விசாரணையின்போது, அட்வகேட் அதிசயம் பிள்ளையைக் கொன்றதும் தான்தான் என்று நம்பிராஜன் ஒப்புக்கொண்டான். கார ணம்: தனது திட்டத்திற்கு இடையூறாக அதிசயம் பிள்ளை, ''கல்யாணி ஏமாந்துவிடாமல் இருக் கும்படி எச்சரிக்கை செய்துவிடுங்கள்'' என்று

சுந்தராம்பாளிடம் கூறியதுதான் என்பதை அவனே கோர்ட்டில் தெரிவித்தான்.

இன்ஸ்பெக்டராக சென்னைக்கு வந்த பாண்டியனுக்கு, உத்தியோக உயர்வும், குடும்பத்துடன் வசிப்பதற்கு வீடும் சர்க்காரால் அளிக்கப்பட்டன. தன்னுடைய உயர்வுக்குக் காரணம் துளசிங்கந்தான் என்பதை அவர் கொஞ்சமும் மறந்துவிடவில்லை. அன்று ஓர் அறையில் அமர்ந்து கொலைத் திட்டம் தயாரித்த—புதைந்து கிடந்த மர்மத்தைத் தோண்டியெடுத்தவர் துளசிங்கம்தானே?



# டான்ஸ் சென்டர்

★

வழுவூர் பாணியில் பரத நாட்டியம் பயிற்சியளிக்கும் ஒரே ஸ்தாபனம் இது.

ஏழை-பணக்காரர் என்ற வித்தியாசம் இல்லாமல் எல்லோருக்கும் சமமாகப் பயிற்சியளிக்கும் ஸ்தாபனம் இதுவே!

பல சினிமாப் படங்களில் நடன டைரக்டராகப் பணியாற்றி வரும் திரு. பி. எஸ். கோபால கிருஷ்ணன் அவர்கள் இந்த ஸ்தாபனத்தின் அதிபர், ஆசிரியர்.

★


மற்ற விவரங்களுக்கு :—

**டான்ஸ் சென்டர்**

**1/96, ராயப்பேட்டை ஹைரோடு**

**மயிலாப்பூர் : : சென்னை-4.**